அறிவடைந்து, கர்த்தரை அடையும்படி தொடர்ந்து போவோம்,அவருடைய புறப்படுதல் அருணோதயம் போல ஆயத்தமாயிருக்கிறது அவர் மழையைப் போலவும், பூமியின் மேல் பெய்யும் முன்மாரி பின்மாரியைப் போலவும் நம்மிடத்தில் வருவார்.

ஓசியா 6:3

## மாற்கு ஒரு அறிமுகம்

ஆக்கியோன் : ஆதித் திருச்சபைத் தலைவர்கள் ஒட்டு மொத்தமாக கருதியது என்னவெனில் யோவான் மாற்க்கே இந்த சுவிசேஷத்தின் ஆசிரியர் என்று கருதுகின்றனர். ஏனெனில் அவர் பேதுருவுடன் மிக நெருக்கமான தோழராய் இருந்தார் என்பதே. 1 பேதுரு 5:12ல் மாற்கு பேதுருவின் மகனே என்று குறிப்பிடப்படுகிறார். பேதுருவின் கண்கள் சாட்சியின் படி மாற்கு சுவிசேஷத்தை எழுதினார் என்று பல ஆய்வாளர்களும் கருதுகின்றனர். இதுவே மாற்கிற்கு அப்போஸ்தலக் கடித அங்கீகாரத்தை அளிக்கிறது.

மாற்கு வேதத்தில் முக்கிய பக்கங்களில் வருகிறார். ஆனால் தேவ புத்தகங்கள் தொகுக்கப்பட்ட போது அவருக்கு அதில் பங்கிருக்கவில்லை. அவர் பன்னிருவரின் பட்டியலில் வரவில்லை. ஆதித்திருச்சபை ஒன்றின் தலைவரும்மல்லர். நாம் அறிந்திருக்கிறபடி பவுலையும், பர்னபாவையும் நடு வழியில் விட்டுச் சென்றதினால், மேற்படி இரண்டு பேருக்கும் இடையில் சண்டையை மூட்டிவிட்டவர். இந்தச்சம்பவம் நிச்சயமாக அவரது சுவிசேஷத்திற்கு அங்கீகாரம் அளிக்க முடியாத படி தாம் சங்கடத்தை தரும். ஆனால் கர்த்தரோ மாற்கை வைத்தே இந்த சுவிசேஷத்தை எழுதவைத்து கர்த்தரின் மீட்பின் திட்டத்ததை மிக அழகாக வடிவமைக்க வைத்துள்ளார்.

அப்போஸ்தலர் 12:12ல் மாற்கை யோவான் மாற்கு என்று காண்கிறோம். மாற்கின் தாயாருக்கு (மேரி) எருசலேமில் மிகப் பெரிய வீடு ஒன்று இருந்திருக்கிறது. என்றும், அந்த வீடே அநேக மக்களுக்கு விசேஷமாக சீடர்களுக்கும் உதவியது என்று அறிகிறோம். பேதுருவின் சிறை விடுதலைக்கு, அந்த வீட்டினின்றும் ஜெபம் ஏறெடுக்கப்பட்டடிருக்கலாம். பேதுரு வீட்டின் வாசலருகே வந்த போது வீட்டின்

பணிப்பெண் அவரது குரலைக் கேட்டு பேதுரு வந்திருப்பதை அறிகிறாள். இந்த சம்பவம் இந்த வீடே பொதுக்கூடுகைக்கு உபயோகப்பட்ட ஒன்று என்று ஊகிக்க இடமளிக்கிறது. பேதுரு இங்கே தொடர்ந்து வந்து சென்றிருக்க வேண்டும்.

மாற்கைப்பற்றி இன்னுமோர் குறிப்பு உண்டு. மாற்கு 14:51,52ல் குறிப்பிடப்படும் "ஒரு இளைஞன்" கெத்சமனே தோட்டத்திலிருந்து சீடர்கள் ஓடிப் போனவுடன் அங்கே பார்த்துக்கொண்டிருக்கும் அவன் மாற்காக இருக்கலாம். மாற்கே அச்சம்பவங்களை நேரில் கண்ட இளைஞன் என்று பலர் குறிப்பிடுகின்றனர்.

அடுத்து மாற்கைப்பற்றிய குறிப்பு? பவுலும், பர்னபாவும் சேர்ந்து முதல் ஊழியப் பயணத்தில் இணைந்து சென்ற போது இவரும் சென்றதாகவே கூறப்படுகின்றது. தரிசனம் நிறைவேற பவுலின் ஊழியத்தில் முதலில் இணைந்துகொண்டார். பர்னபாவின் ஆதரவைப்பெற்றார். ஆனால் ஊழியத்தின் கடினப்பாதைகளுக்கு தாக்குப்பிடிக்காமல் பிரிந்துவிட்டார். அப்போஸ்தலர் 13:13 கூறுகிறது. பம்பிலியாவை விட்டு எருசலேமிற்கு மாற்கு போய்விட்டார் என்று சில ஆய்வாளர்கள் மேலும் கூறுவது: மாற்கு ஏற்கெனவே திருச்சபை நாட்டும் பணியில் ஈடுபட்டிருந்ததால் தன் ஊழியத்திற்கென்றே பவுலையும் பர்னபாவையும் விட்டுப்பிரிந்தார். என்னினும் வேதம் இதைக்குறித்து எந்த தெளிவான குறிப்பையும் கூறவில்லை. ஆனால் பவுலையும், பர்னபாவையும் விட்டு விட்டு, கர்த்தரின் ஊழியப்பணியில் முழுவதும் தன்னைச் செலுத்தாமல் போனவரே மாற்கு என்று அப்போஸ்தலர் நடபடிகள் ஆசிரியர் கூறுகிறார்.
தமது இரண்டாவது பயணத்தின் போது, பர்னபா மாற்கை கூட்டிச்செல்ல விரும்பினார். தற்போது மாற்கு திருந்தி விட்டார்? மன முதிர்ச்சி அடைந்துவிட்டார் என பர்னபா கருதினார். ஆனால் பவுலுக்கோ இந்தப் பையன் மீது நம்பிக்கை வரவில்லை. நடுவழியில் விட்டுப்போனவன் என்ற கோபம் பவுலைவிட்டு நீங்கவில்லை. இதே எண்ணங்களினால் பவுலும்? பர்னபாவும் சண்டைபோட்டுக் கொண்டனர். சீலாவை பவுல் அழைத்துக்கொண்டு ஓர் வழியில் போனார். பர்னபா மாற்குவை அழைத்துக்கொண்டு இன்னொரு ஊழியம் என்று சென்று விட்டார். இந்த

இரண்டு குழுக்களையும் கர்த்தர் ஆசீர்வதித்தார். (அப்போஸ்தலர் 15:36-41) எனினும் பவுலின் வெறுப்பு சிறிது காலமே இருந்தது. கொலோ 4:10ல், பிலேமோன் 2லும் மாற்கை பவுல் தன் உடன் ஊழியர் என்றே கூறுகிறார். 2தீமோத்தேயு 4:11ன் படி மாற்கு தனது ஊழியத்தில் உதவும் மகனே என்கிறார் பவுல். மனமுதிர்ச்சி பெற பவுலுக்கும், பர்னபாவுக்கும் பல வருடங்கள் பிடித்தன. பேதுருவும் மனமுதிர்ச்சி பெற பல வருடங்கள் ஆயின. கெத்சமனே தோட்டத்தில் ஒளிந்துபார்த்துக்கொண்டிருந்த பையன், அவரைப் பற்றி மாறாத குறிப்புக்களை வேதத்தில் கண்ட பையன், மனமுதிர்ச்சி அடைந்தவனாக மாறிய போது அவன் எழுத்து முழுவதும் வாசிக்கும் எழுத்தாக மாறிப்போனது.

தமது சுவிசேஷத்தை மாற்க்கை கொண்டு எழுத வைத்த கர்த்தரின் தீர்மானம் அநாதியானது. பன்னிருவரையும் கர்த்தர் அப்படியே தேர்வு செய்தார். பவுலைக்குறித்து சொல்ல வேண்டாம். இவர்களில் யாரும் கர்த்தருக்கு விரோதமாக முறுமுறுத்ததில்லையா? மாற்கின் விசுவாச பிரயாணத்தை நாம் பார்க்கும் போது கர்த்தரின் நீடிய பொறுமையைக் குறித்து ஆச்சரியப்பட்டு போகிறோம். கர்த்தரோ தம்மால் நேசிக்கப்படும் மக்களில் முதலீடு செய்கிறார். மனமுதிர்ச்சி பெற்றவர்களாக அவர்கள் வாழும் வரை காத்திருக்கிறார்.

உங்கள் விசுவாசப்பிரயாணத்தில் நீங்கள் எங்கிருக்கிறீர்கள். கிறிஸ்துவை தூரத்திலிருந்து பார்த்துக்கொண்டிருக்கிறவரா? சேவை செய்ய தைரியமும், திறமையும் இல்லை என்னிடம் என்று உங்களை குறித்து எண்ணங்கொள்பவரா? விசுவாசத்தில் தோல்வி பெற்று இன்னொரு வாய்ப்பு கிடைக்காதா என்று எண்ணுபவரா? குழப்பமான இளைஞன் ஒருவரை வேலைக்கு சேர்த்துக்கொண்டு தடுமாறும் ஒருவரா? தவறுகளை கர்த்தர் தடுக்கிறார். அவரது தியாகம் வெற்றியை தருகிறது. கர்த்தர் உங்களுக்குச் சொல்கிறதை நன்றிகூறிப்பெறுக. தம்மை உங்களிடத்தில் வெளிப்படுத்திய கடவுளை நன்றியால் ஆராதியுங்கள். விசுவாசப்பிரயாணத்திற்காகவும் கீழப்படிதலுடன் தொடர்ந்து நீங்கள் நடக்கவும் ஜெபியுங்கள்.

**யாருக்கு இப்புத்தகம் எழுதப்பட்டது?**

பழைய ஏற்பாட்டைக்குறித்து புரிதல் இல்லாத, பல்வேறு இடங்களை சேர்ந்த, ரோமில் இருந்த சமூக மக்களுக்காக மாற்கு எழுதினார். பேதுரு சொல்ல சொல்லச், சீடராகவும் பேதுருவின் மொழிபெயர்ப்பாளராகவும் மாற்கே இதை எழுதினார். என ஜெரோம் குறிப்பிடுகிறார். (Lives of Illustrious Men 8: 1994:3:364) யூதர்களிடையே அப்போது அரேமிய மொழியை விட்டு, மத்திய தரைக்கடல் பகுதியில் வெகுவாக வழங்கிய கிரேக்க மொழியை மாற்கு பயன்படுத்தினார். தவிர இந்த சுவிசேஷத்தில் வம்சவராறுகளும், நிறைவேறும் தீர்க்கதரிசனங்கள் பற்றிய குறிப்பும் இல்லை. கிரேக்க மொழிபெயர்ப்பில் பழைய ஏற்பாடு குறிப்புகளும் தரப்படுகின்றது.

**காலம்:**

யாருக்கு இப்புத்தகம் எழுதப்பட்டது என்பது காலத்தை கூட்டினால் தெளிவு பிறக்கும், ஏறத்தாழ கி.பி 55-65 ஆண்டுகளில் இது எழுதப்பட்டிருக்கலாம். இக்காலம் ஆதிகிறிஸ்தவர்களின் துன்பமான காலம் அப்போது உரோமை ஆட்சித்தலங்களில் கிறிஸ்தவம் கடும் தாக்குதலைச் சந்தித்தது. கி.பி 62ல் யாக்கோபு கொலை செய்யப்பட்டார். தொடர் துன்பத்தினால் கிறிஸ்தவர்கள் சிதறிப்போனார்கள். அவர்களது எண்ணிக்கையும் குறைந்தது. சிதறிப்போன சீடர்கள் சென்ற நாட்களில் கிறிஸ்துவைப்பற்றிய தவறான உபதேசங்கள் பெருகின. யூத முறைமைப் போதனைகள் நெருக்கடிக்கு உள்ளாயின எனவே ஓர் நல்ல சுவிசேஷக் குறிப்புகள் எழுதுவது கடமையாயிற்று. கிறிஸ்துவின் ஊழியம் மற்றும் இயேசுவின் தன்மையைக் குறித்து பேசுவது மிகவும் அவசியமாயிற்று.

மாற்கே இந்த சூழ்நிலையில் இயேசுவின் வாழ்வைக் குறித்து முதல் குறிப்புகளை எழுதுகிறார். இச்சுவிசேஷம் ஆதித்திருச்சபையின் அடிப்படைப்புத்தகமாக மாறுகிறது.

இதையே தமது மூல நூலாக பின்னர் லூக்காவும் மத்தேயுவும் எடுத்துப் பயன்படுத்திக் கொண்டனர்.

**நோக்கம் மற்றும் மையப்பொருள்:**

மாற்கு இருக்கும் சுவிசேஷங்களிலே மிகவும் சின்ன நூல். எளிதில் மொழிபெயர்க்கும் தன்மையுடையது. எளிதில் புரியவைக்கும் திறன் உடையது. மத்தேயு லூக்கா அல்லாது, இவரது நூல் கிறிஸ்துவின் ஆரம்ப நாட்களின் குறிப்புக்கள் இல்லாது, நேரடியாக இயேசுவின் மனிதத்தன்மை, அபிஷேகம் இவற்றின் ஊடே நேராக செல்கிறது. ஊழியக்காரனாகிய வேலையாள் இயேசுவை நற்செய்தியாக மாற்கு குறிக்கிறார்.

மாற்கு 10:45ன் படி இயேசு ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் என்றார். உன்னத அதிகாரங்களை கொண்ட ஒருவராக அவர் இருக்க வேண்டும் என்ற சீடர்களின் எதிர்பார்ப்புக்கு மாறாக உலகில் மன்னாதி மன்னராக இருப்பார் என்ற எதிர்பார்ப்புக்கு பொய்யாக தியாகத்தின் அன்பு நிறைந்த வேலையை தம் முன் அவர் வைத்து சிலுவைக்கு இயேசு சென்றார். எதிர்பார்ப்பு அங்கே மாறிப்போனது. மாற்கின் ஒவ்வொரு அத்தியாயமும் இந்த முரண்பாடுகளையே குறிக்கின்றன. யார், யார், கிறிஸ்துவையும் அவரது வேலைப்பண்புகளையும் நேசிக்கின்றனரோ, அவர்களே தமது சகோதர சகோதரிகள் என்கிறார். கூட்டங் கூடிய மக்களை விரட்டிவிடாமல் அவர்களுக்கு

உணவு தந்தார். குழந்தைகளை அரவணைத்தார், பரலோக இராஜ்ஜியத்தில் படிநிலை அதிகாரங்களுக்கு இடமில்லை என்றார். ஏழை விதவைக்கு மதிப்பு அளித்து பின்னவர், முன்னவராவார், முன்னவர் பின்னவராவார் என்றார். வேலையாட்களின் வேலைச் சுகத்தை அனுபவிக்காமல், அனைவருக்கும் வேலையாள் ஆனார். தம்மை ஏற்றுக்கொள்ளும், ஒவ்வொருவருக்கும் இயேசு மீட்பைத் தந்து ஆதரவளிக்கிறார் என்கிறார். இது மாற்கின் வாழ்வுக்கு மிகவும் பொருந்தும்

## பாடம் 1: அத்தியாயம் 1

பாட வாக்கியம் : இயேசு தன் பூலோக ஊழியத்தை தொடங்கினார்.

நாள் 1

வாசிக்க மாற்கு 1:1-8

1. சுவிசேஷம் என்ற வார்த்தையை வசனம் 1. அதன் பொருள் “நல்ல செய்தி” என்பதே. ரோமர் 1:15,16ன் 1கொரிந்தியர் 15:1-8ன் சுவிசேஷத்தின் பொருள் என்ன?

2. யோவான் ஸ்நானகன் மூலம் எந்த பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறது? (ஏசாயா 40:3, மல்கியா 3:1)

3. யோவான் கூறிய செய்தி எனன? மனந்திரும்புதலின் பொருள் என்ன?

4. லூக்கா 3:1ன் படி யோவான் ஸ்நானகன் பற்றி என்ன அறிகிறோம்?

5. யோவானின் செய்திக்கும் இயேசுவின் செய்திக்கும் என்ன வேறுபாடுகள்?

நாள் 2

வாசிக்க மாற்கு 1:9-13, மத்தேயு 4:1-11

1. இயேசுவின் ஞானஸ்நானத்தின் போது பிதா, குமாரன், பரிசுத்த ஆவியைக் காணவில்லையா?

2. யார் இயேசுவை வனாந்திரத்திற்கு அனுப்புகிறார்? ஏன்?

3. எவ்விதம் இயேசு வேதனைகளை மேற்கொள்கிறார்? இதினின்று நாம் கற்பது என்ன?

நாள் 3

வாசிக்கமாற்கு 1:14-20

1. யோவான் ஸ்நானகன் சிறைக்குச் சென்ற பின்பு தமது ஊழியத்தை இயேசு எவ்விதம் தொடங்குகிறார்?

2. இயேசு சீடர்களை ஊழியத்திற்கு அழைப்பிக்கிற போது அவர்களுக்கு என் வாக்குத்தத்தம் தருகிறார்?

3. இன்றைக்கு இயேசுவை பின்பற்றுதலின் பொருள் என்ன?

நாள் 4

வாசிக்க மாற்கு 1:21-28

1. எங்கு இயேசு சென்றார்? அது என்ன நாள்? அங்கு இயேசு என்ன செய்தார்?

2. ஜனங்களின் செயற்பாடு என்ன?

3. அப்போதைய மதத்தலைவர்களின் பிரசங்கத்திற்கு எதிராக இயேசுவின் பிரசங்கத்தின் தன்மை என்ன?

நாள் 5

வாசிக்க மாற்கு 1:29-45

1. வசனம் 29-34களில் நடக்கும் இரண்டு நிகழ்வுகளால் இயேசுவைக் குறித்து என்ன கற்கிறோம்?

2. அசுத்த ஆவிகளைப் பேசவிட்டிருந்தால் அவைகள் என்ன கூறியிருக்கும்? (லூக்கா 4:4)

3. இயேசுவின் ஜெப வாழ்வைக் குறித்து என்ன கற்கிறோம்?

4. வசனம் 41 ல் இயேசுவின் பண்பைக் குறித்து என்ன அறிகிறோம்?

5. தொழுநோயாளிகளை சுகமாக்கிய பின்பு வந்த நேர்மறை எதிர்மறையான காரியங்கள் என்னென்ன?

6. இயேசுவின் ஓர் நாளில் நடந்த பல செயல்கள் என்னென்ன?

நாள் 6

பாடம் 1 : **“இயேசு எதிர்பார்க்கப்பட்ட மேசியா”**

---

**முக்கிய வசனம்** : 1:15 காலம் நிறைவேறிற்று. தேவனுடைய இராஜ்ஜியம் சமீபமாயிற்று. மனந்திரும்பி சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்.

**பாட வாக்கியம்** : இயேசு தமது மண்ணில் ஊழியத்தை தொடங்குகிறார்.

**வாழ்வின் நெறி** : இரட்ச்சிப்பின் மூலம், சுகத்தின் தொடக்கமும் இயேசுவே,

**சுருக்கம்**

யோவான் ஸ்நானகனின் ஊழியம், கிறிஸ்துவின ஞானஸ்நானம், இயேசுவுக்கு வந்த சோதனை மற்றும் சுகமளித்தல் செயல்பாடுகள்.
பழைய ஏற்பாட்டு தீர்க்தரிசனம் இயேசுவுக்கு முன்னர் ஒருவர் பயணிக்கிறார் என்றது. அவருக்கு வழியை ஆயத்தம் செய்கிறவர் ஆவர். ஏசாயா 40:3 கூறுகிறது. “கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள். அவருக்கு பாதைகளைச் செவ்வை பண்ணுங்கள்” இந்த வசனம் யோவான் ஸ்நானகனின் மூலம் நிறைவேறுகிறது. இவர் இயேசுவின் மைத்துனர். எலிசபெத்தின் மகன் (லூக்கா 1:57-60) ஏன் இப்படி செய்கிறீர் என்று யோவானிடம் கேட்ட போது தீர்க்கதரிசனம் இப்படியே நிறைவேறுகிறது என்றார். யோவான் 1:23ன் படி வனாந்திரத்தில் எழும்பிய குரல் அவர். பரிசுத்த ஆவியின் வல்லமை அவருக்கு தெரிகிறது. பழைய ஏற்பாடு அறிகிறார். தமது ஊழிய நோக்கம் அவருக்கு புரிகிறது.

யோவான் ஸ்நானகனின் செய்தி மனந்திரும்புதலே, திசை “மாற்றமே மன மாற்றம்” தோல்விக்கும், பாவத்துக்கும் அடுத்தவரைக்குற்றப்படுத்துவது அல்ல. தன்னைப் பாதுகாத்துக்கொள்வதும் அல்ல. பாவ அறிக்கை செய்து, மன்னிப்பைப் பெறுதலுடன் மட்டும் சுவிசேஷத்தின் செய்தி முடிவது அல்ல, மாறாக

ஞானஸ்நானமும் அத்துடன் கூடிய மாற்றம் நிறைந்த வாழ்வுமே. வசனம் 8ல் கூறுகிறார். நான் தண்ணீரில் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். எனக்குப் பின்வருகிறவர். பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் கொடுக்கிறவர் என்கிறார். மனந்திரும்புதலில் கர்த்தர் நம்மை சந்திக்கிறார் நம்மை சுத்திகரிக்கிறார். இயேசு அந்தப் பூமிப்பகுதியில் இருக்கிறவர் தாம். என்னும் மனம் ஆயத்தப்படுதலுக்காக காத்திருக்கிறார். ஏசாயா 40ல் காணும் தீர்க்கதரிசன நிறைவேறுதல் இது. இப்படியே ஒவவொரு கிறிஸ்தவர்களும் இயேசுவின் வருகைக்காக ஆயத்தம் செய்திட வேண்டும். கர்த்தரின் அன்பை உணர்ந்துகொள்ள மற்றவர்களுக்கு நீங்கள் எப்படி உதவிட இயலும்? உங்கள் வாழ்வின் தன்மைகள், கர்த்தரை பிறர் அறிய உதவுகிறதா?

இயேசு யோர்தான் நதிக்கு வந்து யோவான் ஸ்நானகனிடம் ஞானஸ்நானம் பெறுகிறார். அவர் தண்ணீரிலிருந்து கரை ஏறினவுடனே வானம் திறக்கிறதை பார்க்கிறார் இது தவிர தம் மீது பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போல் இறங்குகிறதைப்பார்க்கிறார். தவிர இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன். என தம்மைக்குறித்து கூறும் ஸ்நானகன் இவரையே தாம் எதிர்பார்த்ததாகக் கூறுகிறார். இவரே மேசியா என அறிகிறார். பூமியில் ஊழியம் செய்ய ஆவியானவர் வலிமை தருகிறார். அவரே சோதனைக்கு உட்பட இயேசுவை வனாந்திரத்திற்கு அனுப்புகிறார். சரீரத்தில் சோதனை மனதில் சோதனை, அறிவுக்கு சோதனை.

ஞானஸ்நானமும், சோதனைகளும் அவரை ஊழியத்திற்கு தயார் செய்தன. நம்மை ஆவியானவர் அபிஷேகிக்கிறார். அதன் பின்னர் நமக்கு சோதனை வருகிறது. இதை உணர்ந்ததுண்டா? சோதனைகள உங்களைப் பக்குவப்படுத்திட உங்களை தயார் செய்து கொண்டதுண்டா?இப்படியே இயேசுவும் சோதனைகளுக்கு உட்பட்டார். வேதனைகளை கர்த்தர் வீணாக்குவதில்லை. இவைகள் மூலம் தம்மிடத்திற்கு மனிதர்களை அழைக்கிறார். முதலில் சீடர்கள் அழைத்தும், பின்னர் மன உருக்கத்தை மனிதர்களிடம் கொட்டியும் இயேசுவின் ஊழியம் தொடங்குகிறது.

அசுத்த ஆவியுள்ள மனிதன் விடுவிக்கிறார். சீமோனின் தாயை குணப்படுத்துகிறார். தொழு நோயாளியை குணப்படுத்துகிறார். யாரிடமும் கூறவேண்டாம் என்றும் கேட்டுக் கொள்கிறார். தம் வல்லமை செயல்களை தம்பட்டம் அடித்துக்கொள்ள அவர் விரும்பவில்லை. ஆனால் மக்கள் ஆச்சரியப்பட்டு போனார்கள். பகுதி முழுவதும் அவரைப் பற்றியே பேச்சு. மக்கள் கூட்டத்தை அவர் தேடவில்லை. ஆனால் அவர்களிடமிருந்து அவர் விலக இயலவில்லை. இன்றைய வல்லமைப் பிரசங்கியாளர்களுக்கு எதிரான செயல்பாடு அவருடையது. இன்றும் கர்த்தர் குணமாக்குகிறார். சரீர சுகம் தற்காலிகமானது. ஆனால் உள்ளான மனதின் சுகமும், அறிவின் சுகமும் நிரந்தரமானவைகள். பாவ விடுதலை கசப்புணர்வினின்றும் விடுதலை, குற்றம் கண்டுபிடித்தல், வெறுப்புணர்வு, இச்சை, கோபம், கவலை இவையெல்லாவற்றினின்றும் விடுதலை அவசியம். ஆவிக்குரிய விடுதலையே நிரந்தரம். ஆவிக்குரிய வாழ்வில் அடிமைத்தனம் உள்ளதா? உங்களுக்கு சுகம் தேவையா?இந்த அத்தியாயம் மற்ற சுவிசேஷங்களில் காணப்படும் சிலவற்றைக் குறிக்கிறது. வசனம் 35ல் இயேசு அதிகாலையில் எழுந்தார் என்கிறது. தனித்த இடத்திற்கு போனார் என்கிறது. இயேசுவுக்கு இதற்கு நேரம் தேவைப்பட்டது இயேசுவிடம் நேரம் செலவழிக்காமல், இயேசுவுக்காய் என்ன செய்திட இயலும்? இதனாலே இயேசு ஜெபத்திற்கு அதிக நேரம் செவிட்டதாக சுவிசேஷகர்கள் கூறுகின்றனர். கர்த்தர் உங்களைத் தயாரித்திட நேரம் கொடுப்பீர்களா? அவரிடம் கேட்க நேரம் செலவழிக்கிறீர்களா?

***இயேசுவே இரட்ச்சிப்பின் ஆக்கியோன் அவரே சுகத்தின் மூலம்***

## பாடம் 2 : அத்தியாயம் 2

**பாட வாக்கியம்** : இயேசு சுகவீனமானவர்களைக் குணப்படுத்துகிறார். பாவிகளை மன்னிக்கிறார். மதப் பெருமையைக் கண்டிக்கிறார்.

**நாள் 1**

வாசிக்க மாற்கு 2:1-12 மற்றும் லூக்கா 5:17-26

1. யார் இயேசுவை பின் தொடர்ந்து சென்றார்கள்? அவர்கள் எங்கிருந்து வந்தவர்கள்? (லூக்கா 5:17)

2. வசனம் 3-5ன் படி இயேசு விசுவாசத்தை எவ்விதம் காண்கிறார்?

3. இன்றைய சூழலில் விசுவாசத்தை எப்படி அடையாளம் காண்கிறோம்?

4. மதவாதிகளுக்கு இயேசுவின் எந்த வார்த்தை பிரச்சனைக்குரியதாக அடையாளப் படுத்தப்படுகிறது? (வசனம் 5)

5. வசனம் 8ல் இயேசுவின் பண்பு என்ன?

6. தன்னைக்குறித்து என்ன பெயர் சூட்டிக்கொள்கிறார்? வசனம் 10ல் இந்தப்பெயருக்கு என்ன பொருள்?

7. மக்களின் பார்வைக்கும், மதவாதிகளின் பார்வைக்கும் என்ன வேறுபாடுகள்? (வசனம் 7,12)

<u>**நாள் 2**</u>

வாசிக்க மாற்கு 2:13-17

1. எந்த வீட்டில் உணவருந்த இயேசு போகிறார்? யார் அவருடன் உணவருந்த வந்திருந்தனர்?

2. இயேசுவின் செயலையும், வார்த்தைகளையும் வரிசைப்படுத்துக.

3. வசனம் 17ன் படி இயேசு எதற்காக மண்ணில் வந்தார்?

<u>**நாள் 3**</u>

வாசிக்க மாற்கு 2:18-22

1. உபவாசத்தைக் குறித்த கர்த்தரின் பார்வை என்ன? (வசனம் ஏசாயா 58:3-7, மத்தேயு 6:16-18)

2. மத்தேயு 23, மாற்கு 7:6,7 இவற்றுடன் இப்பகுதியை ஒப்பிட்டுக்காண்க.

3. "புதுத் துருத்தி" உவமையை ஏன் இயேசு கூறுகிறார்?

**<u>நாள் 4</u>**

வாசிக்க மாற்கு 2:23-28

4. யாத் 34:21ன் படி என்ன பார்வையை பரிசேயர்கள் கூறுகின்றனர்?

5. வசனம் 27-29ன்படி ஓய்வு நாளைப் பற்றிய இயேசுவின் பார்வை என்ன?

6. ஓய்வு நாளின் முக்கியத்துவம் என்ன?

7. இயேசுவின் மக்களுக்கு ஓய்வு நாளின் பார்வை கூறுவது என்ன?

**<u>நாள் 5</u>**

வாசிக்க மாற்கு 3:1-6

1. வசனம் 4யில் இயேசு கேள்வி கேட்கிறார்? அன்றைய மத வாதிகளுக்கு இயேசு என்ன சொல்ல விரும்புகிறார்?

2. இதே காாரியம் லூக்கா 6:6-11யில் திரும்ப வருகிறது? ஏன் மதவாதிகள் இயேசுவுக்கு பயப்பட்டார்கள்? ஏன் இயேசுவானவரை கொலை செய்ய விரும்பினார்கள்?

3. ஏசாயா 58:13,14ஐ ஒப்பிட்டு, என்ன உண்மையை இயேசு உணர்த்த விரும்பினார் என்று அறியீர்கள்?

4. ஏசாயா 58:13,14 உடன் நமக்கு கர்த்தர் அளிக்கும்வாக்குத்தத்தம் என்ன?

**நாள் 6**

## பாடம் 2 : மத வாதிகளிடமிருந்து எதிர்ப்பு

**பாடம்** : மாற்கு 2 மற்றும் லூக்கா 5:17-26

**முக்கிய வசனம்** : மாற்கு 2:17 "பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல், சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புவதற்கு அழைக்க வந்தேன்.

**பாட வாக்கியம்** : இயேசு பிணியாளிகளை குணமாக்குகிறார், பாவிகளை மன்னிக்கிறார், மத வாதிகளுக்கு எதிர்த்து நிற்கிறார்.

**வாழ்வின் நெறி** : அவமான புரிதல்களை நாம் சந்தித்தாலும், எதிர்ப்புகளை ஏற்றாலும், இயேசுவின் சீடர்களாக பின் செல்லுவோம். பாரம்பரிய மதவாத சிந்தனைகளுக்கு இடம் கொடோம்.

**சுருக்கம்**

சூம்பின கையுடைய மனிதனைக் குணமாக்காமல், லேவியை அழைத்தார், உணவருந்துதல், உபவாசம் குறித்த வினாக்கள், ஓய்வு நாள் பற்றிய கருத்து மோதல்.

கலிலேயாவில் இயேசு புகழ் பெற்றிருந்தார். ஆனால் கப்பர் நகூமில் அதுவும் கலிலேயாப்பகுதி வாழ் மதவாதிகளிடமிருந்து எதிர்பை சந்திக்கிறார். பார்க்க அதிகாரம்2 அவருடைய வார்த்தைகளும், செயல்களும் நிச்சயமாக கருத்து மோதல்களை உருவாக்கின. ஆனால் கருத்து மோதல்களில் தான், இயேசு தரும் விடுதலை இருக்கிறது.

கப்பர் நகூமில் அவர் வீட்டில் போதித்துக்கொண்டு இருக்கிறார். கூரையை திறப்பாக்கி திமிர்வாதக்காரன் ஒருவன் கட்டில் மூலம் இறக்கப்படுகிறான். இயேசு

அவன் பாவத்தை மன்னிக்கிறார். இதன் மூலம் வேதபாரகனின் எதிர்விசையை எதிர்பார்க்கிறார். ஏனெனில் வேதபாரகர்கள் இயேசுவின் செய்கை கர்த்தரை அவமதிக்கும் செய்கை என்று கருதிக்கொண்டனர். அவர்களை பொறுத்தவரையில் சரியே, கர்த்தர் மட்டுமே பாவத்தை மன்னிக்க முடியும். எனவே இயேசுவின் அதிகாரம் அவர்களுக்கு எரிச்சலை மூட்டியது. அவர்கள் எந்த பதிலையும் பேச முன் வரவில்லை. மனதில் போட்டு எரிச்சல் அடைந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் மனதில் இயேசு தன்னை கர்த்தர் அளவிற்கு சமமாக்கியது மிகவும் எரிச்சல் ஊட்டியது. இயேசு இவர்களை எதிர்கொண்டு, பிணியாளியை சுகமாக்கினார். இதைச்செய்வதின் மூலம் தனது மண்ணுலக விண்ணுலக அதிகாரத்தை நிலை நிறுத்துகிறார். கர்த்தராகிய இயேசு நமது இருதயத்தை பார்க்கிறார். இருதயத்தின் உள்ளிருந்து புறப்படும் பெருமையையும், செயல்களையும் நோக்குகிறார். மற்றவர்களைக் குறித்ததான எதிர் எண்ணங்கள் உங்கள் உள்ளத்தில் விளிம்பில் வழிவதைக்காண்கிறார். எல்லா பாவங்களும் இருதயத்திலிருந்தே வருகின்றன. கர்த்தா உன் இருதயத்தை சோதிக்க இடம் தருகிறாயா? வசனம் 2:13லிருந்து இன்னொரு எதிர்விசை காரியங்கள் நடைபெறுவதைக் காண்கிறோம். இயேசு கடலருகே போகிறார். மக்கள் கூட்டம் அங்கே செல்கிறது. இயேசு போதித்துக்கொண்டிருக்கையில், லேவி ஆயத்துறையில் உட்கார்ந்திருப்பதைக் காண்கிறார். அவனை அழைக்கிறார் லேவியிடம் என்னவோ இருப்பதை கர்த்தர் காண்கிறார். யாரும் பார்த்திராத ஒன்றை இயேசு அவனிடம் பார்க்கிறார் உங்களிடத்திலும் அவர் எதையாகிலும் எதிர்பார்க்கிறார். லேவியை அவர் அறிவார். வாழ்வின் சுமைகளைச் சுமந்து இளைத்துப்போன மனிதன் அவன். ‘‘என்னை பின்பற்றி வா’’ என்கிறார். இது அவன் வாழ்வை மாற்றுகிறது. பின்னர் அவன் பெயரை மாற்றிக்கொண்டான். இயேசுவைப்பின் பற்றிட நீங்கள் என்னென்ன விட்டு விட்டுச்சென்று இருக்கிறீர்கள்?

அன்று மாலை, லேவியும் அவன் நண்பர்களும் உணவு அருந்துகின்றனர். இயேசு அவர்களுடன் உணவு அருந்துகிறார். இதை வேதபாரகர்கள் பார்க்கின்றனர். கேள்விகள் எழுப்புகின்றனர்? இப்படிப்பட்ட கேவலமான மக்களுடன் இயேசுவுக்கு

என்ன கூட்டு? வரிவசூலை அநியாயமாய் செய்யும் மனிதர்களிடம் இயேசுவுக்கு என்ன தோழமை? நிர்ணயிக்கப்பட்ட தொகைக்கு மேல் லஞ்சம் பெறும் ஆட்களுடன் என்ன நட்பு? இயேசுவின் பதில் அசாதாரணமானது. பாவிகளை மனதிரும்ப அழைக்க வந்தேன். மருத்துவர் யாரிடம் இருப்பார்கள்? நாம் யார் என்பதை நாம் உணர வேண்டும்? வசனம் 18:22ல் பரிசேயர் கேள்வி கேட்கிறார்கள். யோவானும் அவன் சீடர்களும் உபவாசித்தார்கள். நீர் ஏன் செய்யவில்லை? மணவாளன் இருக்கும் போது தோழர்கள் உபவாசிப்பார்களா? முணவாளன் இல்லாத போது உபவாசிக்கலாம். பின்னர் இயேசு துருத்தி உவமைபற்றிக் கூறுகிறார். துணி உவமை பற்றிக் கூறுகிறார். ஏதற்காக மக்கள் உபவாசித்து என்ன அடைய விரும்புகிறார்களோ, அது ஏற்கனவே (அவர்) அவர்களிடம் இருக்கும் போது எதற்காக உபவாசிக்க வேண்டும்?

23-28 வசனங்களின் படி மதச்சடங்காச்சாரங்களின் மீதுள்ள அவர்களின் கண்மூடித் தன்மை பற்றி இயேசு கேள்விகேட்கிறார். ஓய்வு நாட்களின் போது இயேசு சீஷர்களுடன் நடக்கிறார். சீஷர்கள் கதிர்களை கொய்யத் தொடங்குகிறார்கள். வழியருகே இருக்கும் கதிர்களைக் கொய்வதை பயிர்களின் சொந்தக்காரர்கள் கேள்வி கேட்கவில்லை. ஆனால் ''ஓய்வு நாளில் கொய்வது'' வேலை செய்வதற்கு சமம் என்றார்கள் பரிசேயர்கள் 2:27.ன் படி ஓய்வு நாள் மனிதர் நலத்திற்காக உருவாக்கப்பட்டது என்கிறார் இயேசு. கர்த்தர் கிருபையாய் மனிதரின் உடல் நலத்தின் மேன்மைக்கும், உழைக்கின்ற மிருகங்கள், மனிதர்களின் நன்மைக்காகவும் ஓய்வு நாளை அளித்தார். அதில் வலுகட்டாய மதச் சம்பிரதாயங்களைச் சேர்த்து கொடுமைப்படுத்துவது சரியல்ல. மதவாதிகளின் ஓய்வு நாள் கொள்கையில் மனித நலமே முக்கியம். மத்தேயு 11:28 கூறுகிறது ''வருத்தப்பட்டு (பாவ) பாரம் சுமக்கிறவர்களே….. நான் இளைப்பாறுதல் தருவேன். எனவே இயேசு மனுஷகுமாரன் ஓள்வு நாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறாா. என்று முடிக்கிறார். கிறிஸ்து இயேசு தமது

அதிகாரத்தை மனித நலனுக்காக தருவது மகிழ்ச்சி இல்லையா? நம்முடைய பாவங்களுக்காக நம்மை அவர் வெட்கப்படுத்துவது இல்லை அவரைத் தேடுகிறவர்களுக்கு அவர் இளைப்பாறுதலையும், மகிழ்ச்சியையும் தருகிறார். துன்புறுத்தலையும், புரிந்து கொள்ளப்படாமையையும் நாம் சந்தித்தாலும் கிறிஸ்துவின் சீடர்கள் தொடர்வோம்.

## பாடம் 3 : அத்தியாயம் 3

**பாட வாக்கியம்** : மக்களின் தேவைகளைச் சந்தித்து இயேசு ஊழியத்தை செய்தார். அவ்வூழியம் மதவாதிகளின் பாரம்பரியத்தை எதிர்த்து நின்றது. அன்றைய மதிப்பீடுகளை எதிர்த்தது.

### நாள் 1

வாசிக்க மாற்கு 3:7-19

1. இந்த அத்தியாயத்தில் குறிப்பிடும் விதவிதமான மக்கள் இனங்கள் யார்? இயேசுவை சந்திக்க வந்த இவர்கள் யார்?

2. ஆவிகளுக்கு இயேசுவைப்பற்றி என்ன தெரியும்? இயேசு அவர்களை நோக்கி தம்மை பிரபல்யம் பண்ண வேண்டாம் என்று ஏன் கட்டளையிட்டார்? (பார்க்க மாற்கு 3:13-19, மத்தேயு 10:2-4, லூக்கா 16:14-16, அப்போஸ்தலர் 1:13)

### நாள் 2

1. பன்னிருவரும் எவ்விதம் இயேசுவின் சீடர்கள் ஆனார்கள்? வசனம் 13

2. பன்னிருவருக்கும் இயேசுவின் நோக்கம் என்ன? வசனம் 14-15

3. இயேசு சீடர்களாக அழைத்த பன்னிருவரின் பெயர்கள் என்ன?

4. இன்று இயேசு உங்களை அழைத்தால், அவரின் நோக்கம் என்ன?

<u>நாள் 3</u>

மேற்கண்ட எல்லா வசனங்களையும் திரும்ப வாசிக்கவும்

1. இன்றைய நிலையில் தலைவர்களாக வர வேண்டுமெனில் அவர்களின் பண்புகளை, இயேசு அவர்களில் என்ன எதிர்பார்ப்பார்?

2. இயேசுவின் சீடர்கள் எவ்விதம் தெரிவு செய்யப்பட்டனர்? அவரைப்பின்பற்றுகிறவர்களின் பணி என்ன? (மாற்கு 9:30-32,10:35-39,14:50,60-72)

3. சீஷத்துவம் குறித்து என்ன அறிகிறீர்கள்?
   அ. மத்தேயு 10:16-24 16:24-25
   ஆ. மாற்கு 10:17-23
   இ. லூக்கா 9:57-62, 14:25-33
   ஈ. யோவான் 15:18-27

<u>நாள் 4</u>

வாசிக்க மாற்கு 3:20-30

1. யார்? யார்? இயேசுவை எதிர்த்து நின்றார்கள்? அவர்களது குற்றச்சாட்டு என்ன?

2. தம்மைக் குறித்த குற்றச்சாட்டுகளுக்கு இயேசுவின் பதில் என்ன?

3. கர்த்தரின் ஆவிக்கு எதிராக தூஷணம் செய்கிறார் என்று ஏன் இயேசுவின்மீது குற்றஞ்சாட்டப்பட்டது?

4. இதயத்தின் நிறைவினால் வாக்குவாதம் என்ற இயேசுவின் வார்த்தைக்கு பொருள் என்ன? (மத்தேயு 12:34)

**நாள் 5**

வாசிக்க மாற்கு 3:31-55

1. மேற்படி வசனங்களின் படி தம் சொந்த உறவினர்களாலேயே இயேசு தவறாக புரிந்துகொள்ளப்பட்டு இருந்தார்? இத்தகைய அனுபவம் உங்களுக்கு உண்டா?

2. வெறுப்பையும் புரிந்துகொள்ளா தன்மையையும், இயேசு வந்ததினால் ஏதும் உங்களுக்கு அளிக்கின்றதா?

3. கர்த்தரின் ஜனக்கூட்டமாகிய உங்களில் ஆறுதலும், உற்சாகப்படுத்துதலும் உண்டா?

4. ஒப்டைப்பில் நாம் வாழ நாம் என்ன என்ன செய்ய வேண்டும்?

நாள் 6

**பாடம் 3 : மன உருக்கத்தின் இருதயத்தை இயேசு காட்டுகிறார்.**

---

**பாடம்** : மாற்கு 3

**முக்கிய வசனம்** : மாற்கு 3:35 "தேவனுடைய சித்தத்தின் படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்கு சகோதரனும், சகோதரியும், தாயுமாயிருக்கிறான் என்றார்.

**பாடவாக்கியம்** : மக்களின் தேவைகளை சந்தித்து இயேசு ஊழியம் செய்தார். அவரின் ஊழியம் மதவாதபாரியத்தை எதிர்த்தது. அன்றைய மதிப்பீடுகளை எதிர்த்தது.

**வாழ்வு நெறி** : கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களாக, அவரது உண்மைகளைப்பற்றிக் கொள்ளவேண்டும்.அவரது உதாரணங்கள் இவைகள் மற்றவர்களுக்கு அறிவீனமாகத்தோன்றினது.

**சுருக்கம்** : இயேசு ஜெப ஆலயத்தில் சுகவீனமான ஒருவனை சுகமாக்கினார். பரிசேயர்கள் அவரைக்கொலை செய்ய திட்டம் தீட்டுகின்றனர். இயேசு பன்னிருவரை தேர்வு செய்கிறார். குடும்பத்தினரைப்பற்றிய அவரது பார்வை, வேதபாரகரும், பரிசேயரும் தேவ தூஷணம் சொல்கின்றனர்.

மாற்கு.3.ல் மக்கள் கூட்டத்தினால் எவ்வளவு தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறார்கள் என அறிகிறோம். மதவாதிகள் தவிர அவரது குடும்பத்தாரும், நண்பர்களுமே அவரை தவறாக புரிந்துகொண்டிருந்தார்கள். ஓய்வு நாளில் ஜெப ஆலயத்தில் இயேசு அற்புதம் ஒன்றை செய்திருந்தார். சூம்பினகையுடைய ஒரு மனிதனை, ஜெப ஆலய மக்களிடம் காட்டி, ஓய்வு நாளில் நன்மை செய்யலாமா கூடாதா என்று கேட்டார். அவர்கள் அவருக்கு பதில் கூற இயலவில்லை. மதவாதிகளின் இரட்டை ஏமாற்று நிலையை எண்ணி கோபமடைந்தார், துயரமடைந்தார். அவர்களின் கடின இருதயம் கண்டு வேதனைப்பட்டார். இந்நிகழ்வு முடிந்தவுடன் அவர்கள், அரசு ஊழியர்களான ரோம ஏரோதியர்களுடன் கலந்து இயேசுவை அழிக்க வகை தேடினார்கள். லூக்கா 6:11

கூறுகிறது, வேதபாரகரும், பரிசேயரும் “கோபத்தில் கொந்தளித்தார்கள்” என்கிறது. இயேசுவின் பார்வையும், பணியும் மதவாதிகளின் பாரம்பரியத்தை விமர்சனத்துக்குள்ளாக்கியது. அவர்களது அதிகாரம் நீதி பற்றிய அவர்களது பார்வை ஆகியயாவும் இயேசுவின் விமர்சனக்கண்களுக்கு தப்பவில்லை. பிதாவிடம் தாழ்மையுடன் சென்று இரக்கத்தை தேடுவதை விட்டு விட்டு, கசப்பும், சுயநோக்கமும், பெருமையும் அவர்களை ஆட்க்கொண்டது.

யாக்கோபு 4:6 கூறுகிறது. “தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்” மதவாதிகளுக்கு எதிராக இயேசு நிற்பதையும், பாவிகள் மற்றும் தேவையுள்ளவர்களுக்கு இயேசு எப்போதும் தயாளராக இருப்பதையும் நாம் தொடர்ந்து காண்கிறோம்.

மதவாதிகள் மட்டுமின்றி, இயேசுவின் குடும்பத்தாரும், நண்பர்களுமே அவரைப்புரிந்து கொள்ளவில்லை. அவருக்கு கிறுக்கு பிடித்ததென்று நம்பினார்கள். வசனம் 20-21, 31-35. எனவே அவரைக்கட்டி கூட்டிப்போக எண்ணினர்கள். 3:35ன் படி இயேசுவோ “தேவனுடைய சித்தத்தின் படி செய்கிறவன் எவனோ அவனே தனக்கு சகோதரனும், சகோதரியும், தாயுமாக இருக்கிறார்கள் என்றார்”

எதிர்ப்புகள் பல வந்திருந்தும், இயேசுவின் பணி தடைப்படவில்லை. பன்னிருவரை அழைத்து, தன்னுடைய தனித்த நட்பை அவர்கள் உணர்ந்து பின்னாளில் சாட்சியாக அவர்கள் இருக்க விரும்பினார். இயேசுவை அறிந்தவர்களே அவருக்கு சாட்சியாக இருக்க முடியும்.

தம்முடைய கடின சூழலில் இயேசு பேதுருவையும், யோவானையும், யாக்கோபையும் அடிக்கடி சந்தித்து, அவர்கள் அவரது சிறு குழுவாக இருக்க பகிர்ந்துகொண்டார். பன்னிருவருக்கும் தலைமையாக அவர்கள் மூவரையும் நியமித்திருந்தார். சீமோனுக்கு பேதுரு என்றும், யாக்கோபு மற்றும் யோவானுக்கு இடிமுழக்கத்தின் மக்கள் என்றார். யாக்கோபு தான் இரத்தசாட்சியாக முதலில் மரித்தார். பின்பு யோவான் கடைசிமட்டும் வாழ்ந்து யோவான் சுவிசேஷம், யோவானின் கடிதங்கள் மற்றும் வெளிப்படுத்தல் நூல்களுக்கு ஆசிரியரானார். இயேசு சில நல்ல மனிதர்களை அழைத்தார். சாட்சிகளாக இருக்க உருவாக்கினார். நீங்களும்

அவருடன் நேரம் செலவழிக்க விருப்பம் கொண்டுள்ளீர்களா? நம்மை ஒப்படைக்கும் போது நல்ல பாத்திரமாக நம்மை அவர் உருவாக்குவார்.

***இயேசுவின் சீடர்களாக அவரது உண்மைகளைப் பற்றி அவரது முன் உதாரணங்களை அறிக. மற்றவர்களுக்கு அறிவீனம் என்றாலும் பின்பற்றுக.***

## பாடம் 4 : அத்தியாயம் 4-5

**பாட வாக்கியம்** : இருளின், பயத்தின் இராஜ்ஜியத்தை சத்தியத்தால் இயேசு வெல்கிறார்.

**நாள் 1**

வாசிக்க மாற்கு 4:1-20

1. என்னென்ன வார்த்தைகளை, வாக்கியங்களை அல்லது கருத்துக்களை மீண்டும் மீண்டும் இப்பகுதியில் வாசிக்கிறீர்கள்?

2. இயேசு யாரிடம் பேசுகிறாரோ அந்த மக்களைக் குறித்து அவர்கள் வாழ்க்கையைக்குறித்து என்ன அறிகிறோம்?

3. வசனம் 9-12க்குள் உள்ள இரண்டு வகையான மக்கள் யார் யார்?

4. விதை யார்? எது? விதைப்பவன் யார்? எது? மண் யார்? எது?

5. நீங்கள் எவ்வகை மண்? உங்களுக்கு இந்த உவமைகள் மூலம் என்ன கூறுகிறார்?

**நாள் 2**

வாசிக்க மாற்கு 21-34

1. இந்த இரண்டு உவமைகளினால் பரலோக ராஜ்ஜியம் குறித்து நாம் என்ன அறிகிறோம்?

2. வசனம் 24ன் படி, இயேசுவின் பிரசங்கத்தினால் என்ன வாக்குத்தத்தம் பெறுகிறோம்?

**நாள் 3**

வாசிக்க மாற்கு 4:35-41

1. புயலின் போது அதற்குப் பிறகும் சீடர்கள் பயங்களுக்குள்ளிருக்கும் வேறுபாடுகள் என்னென்ன?

2. புயலைப் பார்த்திருக்கிறீர்களா? புயலின் மூலம் கர்த்தர் உங்களுடன் பேசியது என்ன?

3. உங்கள் வாழ்வின் புயல்களின் மூலம் கர்த்தர் உங்களிடம் கற்றுக்கொடுத்ததை பிறருடன் பகிர்ந்து கொள்வீர்கள்?

**நாள் 4**

வாசிக்க மாற்கு 5:21-43 (24-34)

1. இந்த ஸ்திரீக்கு என்ன புயல் வந்தது? எவ்வளவு காலம் இருந்தது?

2. இந்த ஸ்திரீ உதவிக்கு எங்கு சென்றாள்? புயல் வரும் போதும் முதலில் யாரிடம் உதவிக்கு செல்கிறீர்கள்?

3. இங்கு காணப்படும் இயேசுவின் பண்புகள் என்ன?

4. யவீரு யார்? இவன் இயேசுவிடம் ஏன் வந்தான்?

5. மக்களின் பார்வையினின்றும் இயேசுவின் பார்வை எவ்விதம் மாறுபட்டது?

<u>நாள் 6</u>

## பாடம் 4 : "ராஜ்ஜியத்தின் வல்லமையை இயேசு வெளிப்படுத்துகிறார்"

**பாடம்** : மாற்கு 4 மறறும் 5

**முக்கிய வசனம்** : மாற்கு 4:20 வசனத்தைக்கேட்டு, ஏற்றுக்கொண்டு, ஒன்று முப்பதும் ஒன்று அறுபதும், ஒன்று நூறுமாகப் பலன் கொடுக்கிறார்கள். இவர்களே நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள்.

**பாட வாக்கியம்** : இருளின் பயத்தின் ராஜ்யத்தை இயேசு சத்தியத்தால் வெல்கிறார்.

**வாழ்வின் நெறி** : கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் விசுவாசத்தில் நடக்க விரும்ப வேண்டும், பயமுள்ள ஆவியுடன் அல்ல. தங்கள் நிலத்தில் இயேசுவின் நல்ல விதைகளை விதைக்க அனுமதிக்க வேண்டும்.

**சுருக்கம்**

விதைகளின் உவமை, தேவனுடைய ராஜ்யத்தின் உவமை, புயலை இயேசு அடக்குதல், கல்லறை மனிதனைக் குணமாக்கியது, பெரும்பாடுள்ள ஸ்திரீயை குணமாக்கியது, இறந்துபோன சிறுமியை உயிர் பெறச்செய்தல்.

ஒவ்வொரு கணமும் இயேசுவின் உழியம் விரித்தியடைந்து கொண்டே போகிறது. பிரபல்யமாக வேறு ஆகின்றார். அவருக்கு எதிர்ப்பு வளர்ந்துகொண்டே போகிறது. வல்லமை அதிசயங்கள்' அதிகரிக்கின்றன. அவருடைய செய்தியும் கடினமாகிறது, இயேசுவைப்பற்றி செய்தியும், அற்புதங்களும் அப்பகுதியில் பரவுகின்ற நிலையில், திரளான மக்கள் அவரை நோக்கி செல்கின்றனர். மதவாதிகள் இவரைக்குறித்து ஆச்சரியப்பட்டார்கள். பின்னர் தம எதிர்ப்புகளை வலுப்படச்செய்ய ஆரம்பித்தார்கள். அவரைப்பிடிக்க வகைத்தேடினார்கள். தவறான அவர்களின் எதிர்ப்புகள் இயேசு கொண்டு வந்த செய்தியை அவர்கள் அறிந்துகொள்ள தடைகள் ஆயின. தம்முடைய வாழ்வின் மூலம் மனித வாழ்வின் மாற்றத்தையும் சுதந்திரத்தையும் கொண்டு வந்தார். அவர் அருளும் சுதந்திரத்தை அவர்கள் அறிந்துக்கொள்ள விரும்பினார்களில்லை. சுதந்திரமான வாழ்வைக்குறித்து அவர் உவமைகளாக பேசினார். விதைக்கிற உவமையை பேசினார். கர்த்தருயை வார்த்தையை

விதைக்கும், மண்ணை மனிதர்களின் இருதயத்திற்கும் ஒப்பிட்டுப்பேசினார். விதை எங்கும் விதைக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியினால் தயார் செய்யப்பட்ட மனது

வார்த்தையை ஏற்றுக்கொண்டு, பலன் கொடுக்க ஆரம்பிக்கிறது. இந்த உண்மையை அறிவது கடினம். 1 கொரிந்தியர் 2:10-11, 4:1 கூறுவது என்னவெனில், கர்த்தருடைய சத்தியம் சதையாலான மனிதனுக்கு இரகசியமே ஆனால் பரிசுத்த தேவ ஆவியினால் அதை அறியலாம். விசுவாசம் கர்த்தர் அருளும் ஈவு. அவரை நேசித்து அவருக்கு மதிப்பளிக்கிறவனுக்கு அவர் நிறைவு செய்கிறார். மாற்கு 4:24,25.ல் என்ன அளவினால் நாம் அளக்கிறோமோ அதே அளவிற்கு நமக்கும் அளக்கப்படும். நாம் கர்த்தரின் பேரில் வைக்கும் விசுவாச அளிற்கு நமக்கும் தரப்படும். சத்தியத்தை நாம் தேடினால் அகக்கண்களுக்கும், புறக்கண்களுக்கும் அகப்படாத பல சத்திய உண்மைகளை நாம் அறிவோம். பரிசுத்த ஆவி உங்கள் இருதயத்தில் வேலை செய்ய ஜெபிக்கிறீர்களா? கர்த்தரின் வார்த்தை உங்கள் இருதயத்தில் வேலை செய்ய அனுமதிக்கிறீர்களா? ஞானத்தைக் கேளுங்கள் விசுவாசத்திற்காக ஜெபம் பண்ணுங்கள். தீர்க்கமுடன் வேதத்தை வாசியுங்கள். உங்கள் மண்ணான இருதயத்தில் “பூ பூக்கும்”

மாற்கு 4ன் கடைசிப்பகுதியும் 5ன் முற்பகுதியும், பயப்படுதலைக்குறித்துப் பேசுகின்றன. சீடர்கள் கடலில் பயணம் செய்த போது புயலைச்சந்திதனர். நம்முடைய வாழ்க்கையில் பல புயல்கள் நம்மை தொடர்ந்து சந்திக்கவே செய்கின்றன். நம் உள்ளிருந்தும், நமக்கு வெளியினின்றும், நமது பண்புகள், பழக்க வழக்கங்கள், துன்பம், சாவு, நோய், கடினப்பாதை இவை மூலமும் புயல் தாக்கலாம். ஆனால் இயேசு உங்களுடன் இருப்பது பெரும் வித்தியாசத்தை உங்களுக்கு உருவாக்கும். எல்லாவற்றிற்கும் கர்த்தர் அவரே. அவரே நோயை தீர்ப்பவர். பரிகாரி, எல்லா சூழலிலும் சகாயர் அவரே, உபாயன் அவரே. புயல் உங்களைத் தாக்கும் போது கடவுளின் எப்பண்புகள் உங்களை காக்கின்றன. கடலினின்று, சதரேயர் நாட்டில் நுழைந்த போது கல்லறை மனிதனைச் சந்தித்தார் இயேசு. சங்கிலிகளினால் அவன் கட்டப்பட்டிருந்தான். கல்லுகளினால் தன்னைக் காயப்படுத்திக்கொண்டான். இயேசுவைப் பார்த்த கணமே அவன் ஓடி வந்து,

அவரைப்பணிந்து கொள்கிறான். அந்த மனிதனுக்குள் இருந்த பிசாசை அவர் துரத்துகிறார். அவைகளோ, அங்கே இருந்த 2000 பன்றிகளுக்குள் ஓடி கடலில் விழுந்து இறந்தது போயின. பிசாசு பிடித்தவன் நோய் நீங்கி சுகமானதைக்காட்டிலும், பன்றிகள் செத்துப்போனது அவர்களுக்கு, அந்த ஊர் மக்களுக்கு கவலை. அவர்கள் இயேசுவுக்கு நன்றி தெரிவிக்கவில்லை. ஊரைவிட்டு போகச்சொல்கிறார்கள். பன்றிகளினால் பொருளாதார ஆதாயம்
போய்விட்டதே என்பதுதான் அவர்கள் கவலை. தங்களுள் ஒருவன் சுகமடைந்ததைக்குறித்து அவர்கள் சந்தோஷப்படவில்லை. இந்த மனிதனோ இயேசுவைப்பின் தொடர விரும்புகிறான். ஆனால் இயேசு அவனிடம் அவன் இனத்தாரிடத்தில் அவன் போக அவர் விரும்பினார். சாட்சியாக இருக்கும் படி அவனைக்கேட்கிறார். எவ்விதம் அவன் வாழ்வு மாறினது என்று தெரிவிக்க விரும்புகிறார்.

நம் ஒவ்வொருவரிடமும் ஓர் கிருபையின் கதை உண்டு. நாம் இருக்கும் இடத்தில் நாம் சாட்சியாக இருக்க இயேசு விரும்புகிறார். பிலிப்பியர் 3:12ல் பவுல் எல்லா நிலைகளிலும் தான் ரம்மியமாக இருந்தேன் என்கிறார். சின்ன சின்ன விஷயங்களில் நாம் உண்மையாகவே இருக்க அழைக்கப்படுகிறோம். என்னென்ன சின்னக்காரியங்களில் நீங்கள் உண்மையாயிருக்கிறீர்கள்?

பயப்படுதல் பற்றிய விளக்கம் யவீரின் விளக்கமாக வாழ்வையும் தொடுகிறது. யவீரு பயத்துடன் இயேசுவிடம் வந்தான். இயேசுவைச் சுற்றி ஓடும் கூட்டத்தாரைப்போல் அவன் இல்லை. யவீரு மதவாதிக் கூட்டத்தில் ஒருவன். ஆனால் இயேசுவின் வல்லமையை நம்புகிறான். அவரிடம் தாழ்மையாய் முழங்கால்படியிடுகிறான். மத்தேயு 9:23-26 கூறுகிறது. அவனின் விசுவாசம் அவன் மகளை குணமாக்குகிறது என்று விசுவாசத்துடன் தம் கைகளை நோக்கி இயேசுவிடம் நீட்டுவோருக்கு இயேசு சுகம் தருகிறார். எனினும் நாம் விசுவாசத்தில் பலவீனமுள்ளவர்கள் என்பதை இயேசு அறிவார். ஆனால் நேர்மையாயும், தங்கள் பலவீனங்களை உணர்ந்தவர்களையும், தங்கள் இயலாமையை அங்கீகரிப்பவர்களையும் அவர் கைவிட்டதேயில்லை. உங்கள் வாழ்வின் எப்பகுதியில் உங்களுக்கு சுகம் தேவை? எந்தப்பகுதியில் நீங்கள் மிகப்

பலவீனமாயிருக்கிறீர்கள் என்று உணர்கிறீர்களோ, அங்கே இயேசு கைநீட்டி உங்களை தொடுவார். அவரை நம்புங்கள்.

***கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் விசுவாசத்தில் நடக்க விரும்ப வேண்டும், பயமுள்ள ஆவியுடன் அல்ல. தங்கள் நிலத்தில் இயேசுவின் நல்ல விதைகளை விதைக்க அனுமதிக்க வேண்டும்.***

**பாடம்** 5 : அத்தியாயம் 6

**பாட வாக்கியம்** : சரீரப்பிரகாரமானதும், ஆவிக்குரியாமான உண்மைகளில் இயேசு தன் வல்லமையை வெளிப்படுத்துகிறார்.

**நாள் 1**

வாசிக்க மாற்கு 6:1-6

1. அவருடைய சொந்த ஊரில் இயேசுவுக்கு என்ன மதிப்பு?

2. வசனம் 1-6ன் படி காரணகாரியங்கள் இயேசுவுக்கு எதிரானவைகள் என்னென்ன?

**நாள் 2**

வாசிக்க மாற்கு 6:7-13

1. தம்முடைய சீஷர்களை அனுப்பும் போது என்ன கட்டளைகளை இயேசு தருகிறார்?

2. தன் சீஷர்கள் வழிக்கு ஏதும் கொண்டு செல்லக்கூடாது என்று கட்டளையிட்டதற்கு காரணங்கள் என்ன?

3. நகரங்களுக்கு, கிராமங்களுக்கும் இயேசுவின் சீஷர்களின் செய்தி என்ன?

4. இரண்டிரண்டு பேராக ஊழியம் செய்வது நல்லதா? தனித்து ஊழியம் செய்வது நல்லதா?

**<u>நாள் 3</u>**

வாசிக்க மாற்கு 6:23-29

1. யோவான் ஸ்நானகனை சிரச்சேதம் செய்த கதையை திருப்பிக்கூறுக?
2. இந்தக் கதையை ஏன் சுவிசேஷகர்கள் இங்கு கூறுகிறார்கள்?
3. இயேசுவை பின்பற்றுவதில் உள்ள அபாயங்கள் என்ன?
4. இயேசுவைப் பின்பற்றுவதால் துன்பத்தை அனுபவித்துள்ளீர்களா?

**<u>நாள் 4</u>**

வாசிக்க மாற்கு 6:30-44

1. ஏன் தன் சீஷர்களுடன் தனி இடத்திற்கு சென்றார்? இதில் நாம் பெறும் அறிவு என்ன?
2. மக்கள் கூட்டத்தைப்பற்றி இயேசுவின் கரிசனை என்ன?
3. மலை உச்சியில் மக்கள் பார்த்த அற்புதம் என்ன?
4. ஜனங்கள் பின்தொடர்ந்தது இயேசுவுக்கு எரிச்சலையா மூட்டியது?
5. வசனம் 34ன் படி மக்கள் கூட்டத்தைப்பற்றிய இயேசுவின் பார்வை என்ன?
6. சீஷர்கள் செய்யும் படி இயேசு அவர்களுக்கு சொன்ன காரியம் என்ன?

**<u>நாள் 5</u>**

வாசிக்க மாற்கு 6:45-56

1. வசனம் 45ன் படி யார் இரவில் சீஷர்களை படகுக்கு அனுப்பியது?

2. புயல் காலத்தில் சீஷர்களை இயேசு ஏன் அனுப்பினார்?

3. வசனம் 45ன் படி விசுவாசத்தில் சீஷர்களின் நிலை என்ன?

4. உங்கள் விசுவாசத்தை சோதிக்கும் படி இயேசு என்றேனும் உங்களை துன்பச் சூழலில் தள்ளியிருக்கிறாரா?

5. இயேசுவை எதிர்த்து இப்பகுதியில் பல எதிர்விசைகள் இருந்தன. மக்களிடமிருந்து, மதவாதிகளிடமிருந்து, சீஷர்களிடமிருந்து? யாரைப்போல நீங்கள் இருக்கிறீர்கள்?

6. இயேசுவை நோக்கி உங்களைச் செலுத்தியது என்ன?

7. இயேசுவைப்பற்றி அறிகிற அறிவினால் உங்கள் விசுவாசம் வளர ஜெபம் பண்ணுக.

## நாள் 6

**பாடம்** 5 : புரிதல் இன்மை, சாட்சியாக மரித்தல், அற்புதங்கள் போன்றவை இயேசுவின் முடிவைத் தெரிவிக்கின்றன.

---

**பாடம்** : மாற்கு 6

**முக்கிய வசனம்** : மாற்கு 6:50 “ நான் தான், பயப்படாதிருங்கள்”

**பாட வாகியம்** : சரீரப்பிரகாரமானதும், ஆவிக்குரியதுமான உண்மைகளில் இயேசு தம் வல்லமைகளை வெளிப்படுத்துகிறார்.

**சுருக்கம்**

இயேசு நிராகரிக்கப்படுகிறார், பன்னிருவர் அனுப்படுகின்றனர். யோவான் கொலை செய்யப்படுகின்றர், 5000 பேர் உணவு பெறுகின்றனர், இயேசு கடலில் நடக்கிறார், கெனசரேத்தில் அவர் சுகமாக்குகிறார். இயேசு தம் சொந்த ஊருக்கு வந்தார். அவருடைய சீஷர்கள் அவரை பின்பற்றினார்கள். மற்ற நகரங்களில்

செய்தது போல இங்கும் ஜெப ஆலயத்தில் செய்தி தந்தார். ஆனால் மதவாதிகளும், சுற்றுப்புறத்தாரும் அவரைக்குறித்து எரிச்சல் அடைந்தார்கள். அவரது மெய்மை மற்றும் அதிகாரங்களை கேள்விக்கு உட்ப்படுத்தினார்கள். பாவம் நிறைந்த அவர்களின் அவநம்பிக்கை அவரை அற்புதங்கள் செய்யவிடாதபடி கட்டுப்படுத்தியது. அவிசுவாசம் நல்லதல்ல. வாழ்வின் நெறிகளை நம் பண்புகள் உதவியால் மட்டும் பார்க்க இயலாது. ஆவிக்குரிய பண்புகள் அவற்றை பார்க்க உதவுகின்றன. கர்த்தரின் குணங்களுடன் வாழ்வையும், மக்களையும் பார்த்திட வேண்டும். அவருடைய வல்லமையும் வளரும் அபரீதமானவைகள். உங்கள் செயல் பாடுகளினால் மக்கள் இயேசுவின் பண்புகளைப் பார்க்கிறார்களா? மக்களை சந்திக்கவே இயேசு கிராமம் கிராமமாக சென்றார். இயேசுவும் தன் சீஷர்களை இரண்டிரண்டு பேராக அனுப்பி மக்களிடையே நல்ல அதிகாரம், சமாதானம் உருவாகச்செய்தார். தம்முடைய பணிக்காக செல்லும் சீஷர்களை அவர் தயாரித்தே

அனுப்புகிறார். அவரது நன்கொடைகள் போதுமானவைகள் அல்ல என நீங்கள் எண்ணுகிறீர்களா?

இயேசுவின் பெயரும், பணியும் அதன் புகழும் பரவுதல் அதிகரிக்க, அதிகரிக்க ஏரோது அவற்றைக் கேள்விப்படுகிறான். தான் சிரச்சேதம் செய்த யோவான் உயிரோடு எழுந்து விட்டானோ என்று பதற்றமடைகிறான். யோவான் ஸ்நானகனின் மரணம் இயேசுவின் மரணத்தை முன் அறிவித்தது. இயேசு யோவானின் மரணத்தைப்பற்றி கேள்விப்பட்டவுடனே தன் சீஷர்களிடம் தனித்து பேச விரும்பினார். ஆனால் மக்கள் கூட்டம் அத்திட்டத்தை தடுக்கிறது. மக்கள் கூட்டத்தின் மேலுள்ள அவரின் பாசமும், கரிசனையும் அவரை சகித்திருக்க செய்தன. வசனம் 34 கூறுகிறது. மக்கள் கூட்டத்தை மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல அவர் பார்க்கிறார் என்று இங்கு தான் 5000 பேருக்கு உணவு அளிக்கும் அற்புதம் நிகழ்கிறது. அதுவும் இரண்டு மீன்களையும் ஐந்து அப்பத்தையும் கொண்டு அற்புதம் செய்தார். மக்கள் கூட்டத்திற்கு இரவு வணக்கம் கூறிவிட்டு, இயேசு ஜெபம் பண்ணும்படி மலைக்கு செல்கிறார். சீஷர்களையோ பெத்சாயிதா நோக்கி படகில் செல்ல கட்டளையிடுகிறார். பின்னர் பார்க்கிறார். அவர்களின் படகு புயலில் தத்தளிக்கிறதை. எனவே அவர்களைச் சந்திக்க இயேசு கடலின் மீது நடந்து செல்கிறார். அவர்களை பார்த்தார், கடலை அமர்த்தினார். வசனம் கூறுகிறது, அவர்கள் பிரமித்து ஆச்சரியப்பட்டுப்போனார்கள் என்று " இருதயம் கடினமாயிருந்த படியால்,

அப்பங்களை குறித்து உணராமல் போனார்கள்" இயேசுவை பொறுத்தவரை அறிவில் அவர்கள் உணர்வடைந்தவர்களாய் இருக்கவில்லை. இயேசுவை பின்பற்றியவர்கள் தான், ஆனால் இயேசுவை அறியவில்லை. அவரே தேவகுமாரன் என்று அறியவில்லை.

எனினும் அவர்களை அவர் தொடர்ந்து விசுவாசத்தில் நடத்தவே செய்தார்.

ஒவ்வொரு அற்புதத்தையும், ஒவ்வொரு சுகமளிக்கும் நிகழ்வையும் அறிந்து பின்னே இயேசு கூறும் வார்த்தைகளை அறியவே அழைக்கப்படுகிறோம். சாதாரண புறக்கண்களுக்கு அப்பால் உள்ள ஆவிக்குரிய வாழ்வின் நிலைகளை புரிந்து

கொள்ள வேண்டும். நிறைவான இயேசுவின் செயல்பாடுகளில் கர்த்தர் என்ன சொல்கிறார் என்பதை அறிய வேண்டும். தம்மால் சுகத்தை அளிக்க முடியும் என்று அறிந்த மக்களுக்கு அவர் உதவினார். புயல்களில் பாதுபாப்பை தந்தார். இன்னும் நம்மிடம் கூறுகிறார். ''நான் தான் பயப்படாதிருங்கள்'' என்று…..

***கிறிஸதுவைப் பின்பற்றுவோர் வாழ்வின் புயல்களில் காத்தரையே நோக்குகின்றனர்.***

பாடம் 6 : அத்தியாயம் 7

**பாட வாக்கியம்** : இயேசு இருதயத்தை அறிவார்

**<u>நாள் 1</u>**

வாசிக்க மாற்கு 7:1-13

1. யாருடைய பாரம்பரியத்தை சீஷர்கள் பின்பற்ற தவறினார்கள் என்று குற்றம் சாட்டப்படுகின்றார்கள்?
2. வசனம் 6ல், மதவாதிகள் குறித்து இயேசு என்ன கூறுகிறார்? ஏன்?
3. இதன் மூலம் இயேசுவின் போதனை என்ன?

**<u>நாள் 2</u>**

வாசிக்க மாற்கு 7:14-16

1. வசனம் 15ன் படி இயேசு மக்களிடத்தில் என்ன கூறுகிறார்?
2. அதன் பொருள் என்ன?
3. காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று இயேசு ஏன் கூறுகிறார்?
4. இயேசுவின் உண்மைகளை கேட்ட காதை நமக்குத் தந்தவர் யார்?

**நாள் 3**

வாசிக்க மாற்கு 7:17-23

1. வசனம் 17-23ன் படி இயேசு தன் போதனையை எவ்விதம் விளக்குகிறார்?

2. ஏன் சீஷர்கள் பாரம்பரியங்களிலிருந்து விலகி வாழ்கிறார்கள்?

3. கர்த்தருக்கு பயந்து உண்மையாய் வாழும் நிலைவிட்டு மனிதர்களுடைய எந்த எந்த பாரம்பரியங்களில் நீங்கள் வாழ்கிறீர்கள்?

**நாள் 4**

வாசிக்க மாற்கு 7:24-30

1. தீரு பெண் இயேசுவிடம் என்ன வேண்டினாள்?

2. இயேசுவின் பதில் என்ன? அதின் பொருள் என்ன?

3. எவ்விதம் இயேசு அவள் விண்ணப்பத்திற்கு செவி கொடுத்தார்?

4. இந்தப் பெண்ணின் மூலம் நாம் கற்பது என்ன? (மத்தேயு 15:21-28)

**நாள் 5**

வாசிக்க மாற்கு 7:31-37

1. வசனம் 31-37ல் செவிடனைக் குணமாக்க என்ன செயல்களை இயேசு செய்கிறார்?

2. கொன்னை வாயுடைய செவிடன் சுகமானதைக்கண்டு மக்களின் எதிர்விசை என்ன? வசனம் 36

3. செவிடனைக்குணப்படுத்தின பின்பு வேறுயாரிடமும் இதைக்குறித்து சொல்ல வேண்டாம் என்று இயேசு ஏன் கட்டளையிட்டார்?

__நாள் 6__

__பாடம் 6__ : அறிந்துகொள்ள விரும்பும் இருதயங்களுக்கு இயேசு கற்றுக்கொடுக்க விரும்புகிறார்.

---

**முக்கிய வசனம்** : மாற்கு 7:13 “நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத்தினால் தேவ வசனத்தை அவமாக்குகிறீர்கள்.

**பாட வாக்கியம்** : இயேசு இருதயத்தை அறிவார்.

**வாழ்வு நெறி** : கிறிஸ்துவை பின்பற்றுவோம் தங்கள் இருதயத்தை கேட்டு நடக்கின்றனர்.

**சுருக்கம்** : மதவாதிகளின் மாய்மாலத்தை இயேசு கண்டிக்கிறார். புறதேசத்து மக்களின் விண்ணபத்தை மனம் உருகி நிறைவேற்றுகிறார். கொன்னவாயுடைய செவிடனைக் குணப்படுத்துகிறார்.

நம்முடைய பழக்க வழக்கங்களின் மீதுள்ள. நமது இருதயத்தினலேயே அவர் கேட்கிறார். அவரை மெய்யாகவே நேசிக்கிறவர்களின் பக்தியை நேசிக்கிறார். வெளித்தோற்றங்களை உருவாக்க பாரம்பியங்கள் பயன்படலாம். உள்காரியங்கள் செம்மையாயிருக்க மனது உண்மையை நாட வேண்டும். இந்தப் பிரச்சனை எபிரெயரின் பிரச்சனை மட்டுமின்றி, இன்றைய பிரச்சனனையும் கூட. பாரம்பரியங்கள் ஒன்று நீதி சார்ந்ததாக இருக்கலாம். அநீதி சார்ந்ததாகவும் இருக்கலாம். அவரைக்குற்றப்படுத்த மாட்டிவிடவே வேதபாரகரும், பரிசேயருமான மதவாதிகள் எருசலேமிலிருந்து வந்திருந்தனர். இயேசுவின் புகழ் பரவியதால் எருசலேமிற்கும் எட்டியதால், மதவாதத்தலைவர்கள் பயந்தார்கள். இயேசுவை ஒழித்து விட விரும்பினார்கள். மதவாதிகள் கண்டது. இயேசுவும் அவர் தம் சீஷர்களும்

பாரம்பரியத்தை கைக்கொள்ளவில்லை. கைகழுவுதல் பாரம்பரியத்தில் பிரபலமானது கைகளை நீட்ட வேண்டும். உள்ளங்கைகள் வானத்தை நோக்கி விரிக்கப்பட்டு தண்ணீர் ஊற்றுவதற்கு நேராக இணைத்துப்பிடிக்க வேண்டும். நம்மூர் வழக்கம் போலவே, ஆட்கள் மாற்றி மாற்றி தண்ணீர் விட்டு கைகளை கழுவிக்கொள்வார்கள். இந்த கைகழுவுதல் பணியை மதவாதிகள் மேலும் பல விதிமுறைகளை எருவாக்கி கடினப்படுத்தி வைத்திருந்தனர். இதெல்லாம் பல நூற்றுக்கணக்கான பாரம்பரிய விதிமுறைகளையும் அவர்கள் உருவாக்கி மக்களுக்கு கொடுத்து மக்கள் சிரமப்பட்டு நொந்து போகவே ஏற்பாடு செய்திருந்தனர். வெளிக்காரியங்கள் சுபமாய் நடைபெற வேண்டும் என்பதே மதவாதிகளின்

விருப்பம், இதையே இயேசு எதிாக்கிகிறார். பாரம்பரியங்கள் வீண் பெருமைகளையும், மக்களுக்குள் பிரிவினைகளையும், மாய்மாலத்தையும் உருவாக்குகின்றன என்பவையே இயேசுவின் குற்றச்சாட்டு, மத்தேயு 15:12 கூறுகிறது, “பரிசேயர் இந்த வசனங்களைக்கேட்டு இடறல் அடைந்தார்கள்” ஏசாயாவின் கூற்றை இயேசு பயன்படுத்தி அவர்களிடம் நல்ல வார்த்தை இருக்கிறது. ஆனால் பண்புகள் இல்லை என்கிறார். உலக ஞானங்களும், தத்துவங்களும் மதபக்தியின் வடிவத்தை எடுத்துக்கொண்டன என்கிறார். கர்த்தரின் கட்டளைகளை விட்டு விட்டு, மதப்பாரம்பரியங்களை மனித மன விஷயங்களை அவர்கள் ஏற்று அதில் வழிபாடுகளை நடத்தினார்கள். மெய்யான சுத்திகரித்தல் என்பது மனமாற்றமே. வெளிவேஷங்கள் போடுவதல்ல என்பதே இயேசுவின் கொள்கை.

விசுவாசத்தால் நாம் குணமாக்கப்படுகிறோம். உண்பதினாலோ, உடுத்துவதினாலோ அல்ல. கிறிஸ்துவை பின்பற்றுவோர் அவர் நீதியில் வாழ வேண்டும். பாரம்பரியங்களிலிருந்து சத்தியத்தை வேறுபிரித்திட உங்களால் இயலுமா? உங்கள் அறிவினால் கர்த்தரை நேசித்து கீழ்படிகிறீர்களா? அல்லது உங்கள் அறிவு மனித பாரம்பரியங்களினால் சிக்குண்டு தவிக்கிறதா?

இதன் பிறகு இயேசு புறதேசமான தீரு பக்கம் செல்கிறார். புறதேசத்துப்பெண் அவரை அணுகுகிறாள். பிசாசு பிடித்த மகள் அவளுக்கு உண்டு. இயேசுவிடம்

தொடர்ந்து வேண்டுகிறாள். அவளுடைய நம்பிக்கையை அவள் இழக்கவில்லை. இஸ்ரவேலுக்கே தம் ஊழியத்தின் முதன்மை என்கிறார் இயேசு. தொடந்து வரும் விசுவாச வேண்டுகோளை அவரால் புறக்கணிக்க முடியாது. உங்களது வேண்டுதல் நியாயமாய் தொடர்ந்து அவரிடம் செல்கிறதா? இந்தப்பகுதியை விளக்குகிறவர்கள் யூத தேசத்து மக்களிடம் மட்டுமே இயேசு பிரியமாயிருக்கிறார் என தவறாக வியாக்கியானம் செய்து குழப்புகின்றனர். விஷயம் அப்படியல்ல. சூழலை நன்கு அலசிப்பாருங்கள். உண்மைகள் பல நமக்கு புரியும். பாரம்பரியங்களை குறித்துப்பேசின பின்பு, புறதேசத்துக்கு அவர் செல்கிறார். தீட்டாக கருதப்பட்ட தேசம் அது. தீட்டு ஏற்படாதது போல மனிதர்களின் வசைகளினால் தீட்டு உண்டாகாது என்று சீஷர்களுக்கு விளக்குகிறார். அவரைப்பொறுத்த வரை யூதரும், கிரேக்கரும் ஒன்றே. மனிதர்களே இனவெறி உடையவர்கள், சாதி வெறியுடைவர்கள். கர்த்தரைப்பின் பற்றுகிறவர்கள் மனிதர்களை மனிதர்களாக நடத்துப்பவர்கள். கர்த்தர் பார்ப்பது போல சீஷர்களும் பார்க்க வேண்டும் என அவர் விரும்பினார். பல்வேறு மொழி, இன, இருபால் மக்களையும் கர்த்தரின் பால் கொண்டு வந்து அவர்களின் மனமாற்றமே கர்த்தர் நம்மிடம் எதிர்பார்க்கும் காரியம். மக்களின் பன்மை நிலை கர்த்தருக்கு மகிழ்ச்சி அவருக்கு மனித இருதய அறிவின் மனமாற்றமே முக்கியம்.

***“ கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் இருதயத்திற்கு கீழ்படிந்து கவனிக்கிறனர்”***

பாடம் 7 : அத்தியாயம் 8

**பாட வாக்கியம்** : தம் அடையாளத்தையும், தம் அழைப்பையும் இயேசு வெளிப்படுத்துகிறார்.

<u>**நாள் 1**</u>

வாசிக்க மாற்கு 8:1-9

1. மாற்கு 6:30-44.ல் உள்ள 5000 பேருக்கு உணவளித்த சம்பவத்தை மீண்டும் வாசிக்கவும்.

2. 5000 பேருக்கு உணவளித்த நிகழ்வையும், 4000 பேருக்கு உணவளித்த நிகழ்வையும் ஒப்பிட்டு வேறுபாடுகளைக் கண்டறிக.

3. திரளான மக்களுக்கு உணவளிக்க இயேசுவை உந்திய சக்தி எது?

<u>**நாள் 2**</u>

வாசிக் மாற்கு 8:10-31

1. பரிசேயரின் புளித்தமா என்று இயேசு குறிப்பிடும் காரியத்தின் பொருள் என்ன?

2. சீஷர்கள் மத்தியில் செய்த பல காரியங்களில், அவர் அவர்களிடம் என்ன எதிர்பார்ப்பு உஙடையவராய் இருந்தார்.? உங்களிடத்தில் இது என்னவாயிருக்கிறது?

**நாள் 3**

வாசிக்க மாற்கு 8:22-26

1. இதற்கு முன்பு வாசித்த சுகமளிக்கும் சம்பவங்களிலிருந்து இங்குள்ள சம்பவம் எப்படி வேறுபடுகிறது?
2. சுகமளித்தல் நிகழ்வுக்கு முன்பு முன் தயாரிப்பு மேடைகள் ஏதேனும் இயேசு செய்தாரா?

3. உடல் ரீதியான பார்வைக் குறைபாடுக்கும் ஆவிக்குரிய ரீதியான பார்வைக் குறைபாடுக்கும் வேறுபாடு உண்டா?

4. 11 நாளாகமம் 16:9, சங்கீதம் 51:10, 16-17 மற்றும் எரேமியா 24:7ன் படி கர்த்தரின் பிள்ளைகளிடத்தில் கர்த்தர் என்ன எதிர்பார்க்கிறார்?

**நாள் 4**

வாசிக்க மாற்கு 8:27-33

1. வசனம் 29ன் படி பேதுருவின் பதிலுக்கு பேதுரு முடிவு செய்து வந்ததற்கு காரணங்கள் என்ன?

2. பேதுருவின் பதில் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? வசனம் 29

3. இயேசு தாம் கொல்லப்படபோகிறோம் என்று கூறியது குறித்து பேதுருவின் பதில்?

4. பேதுரு வசனம் 32கூறியதற்கு என்ன காரணங்கள்?

5. பரிசுத்த ஆவியின் கூட்டுறவில் வளரவும், சாத்தானை எதிர்கொள்ளவும் நாம் செய்யக்கூடியவைகள் என்ன?

**நாள் 5**

வாசிக்க மாற்கு 8:34-9:1

1. சீஷராக மாறுவதற்கு என்ன காரியங்கள் தேவை இயேசுவின் படி?
2. சீஷத்துவத்தின் விலை என்ன?
3. மக்கள் கூட்டத்தின் ஒருவராக நீங்கள் இருந்திருப்பீர்கள் எனில், இயேசுவிடம் என்ன கேள்வி கேட்டிருப்பீர்கள்?

**நாள் 6**

பாடம் 7 : **"புறதேசத்து மக்களையும் நோக்கி இயேசு நேசக்கரம் நீட்டுகிறார்"**

---

**பாடம்** : மாற்கு 8:37 " மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக்கொடுப்பான்?"
**பாடவாக்கியம்** : இயேசு தம் அடையாளத்தையும், அழைப்பையும் வெளிப்படுத்துகிறார்.
**வாழ்வு நெறி** : இவ்வுலக வாழ்வை அல்ல, நித்திய வாழ்வின் தன்மைகளுக்கு ஏற்ப கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் நடக்க வேண்டும்.

**சுருக்கம்**

இயேசு 4000 பேருக்கு உணவளிக்கிறார், பார்வையற்றவனுக்கு சுகம் தருகிறார். தன் மரணத்தை முன் அறிவிக்கிறார். அதிகாரம் 8, இயேசுவின் ஊழியப்பாதையில், புறதேசத்து மக்களை நோக்கி காட்டும் நேசத்தை வெளிப்படுத்துகிறது. இப்போதும்

பெரும் மக்கள் கூட்டத்திற்கு போதிக்கிறார். மூன்று நாளைக்குப் பின்பு மக்களை குறித்து கவலைப்படுகிறார். சாப்பிடாத, பலதூரம் பயணப்பட்டு வந்த மக்கள் அவர்கள். ஏழு அப்பங்களையும் சிறு மீன் துண்டுகளையும் கொண்டு 4000 பேருக்கு உணவளிக்கிறார். 4000 பேருக்கு உணவு கொடுத்ததோ புறதேசத்தில் அவரிடம் அடையாளம் கேட்கிறார்கள். பெருமூச்சு விட்ட அவர் அடையாளம் தர மறுக்கிறார். பிற்பாடு படகில் வந்துகொண்டிருந்த சீஷர்களுக்கு பயணத்திற்கு உணவுகொண்டு வர மறந்தது நினைவுக்கு வந்து கவலைப்பட்டுப்போனார்கள். இருமுறை ஒன்றுமில்லாததில் இருந்து பல ஆயிரக்கணக்கான மக்களுக்கு தம்மால் உணவு வந்ததை இயேசு அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார். எனிறும்

உணவுகொண்டு வர ஏன் மறந்து விட்டோம் என்ற சண்டையோ சீஷர்களுக்குள் நீடிக்கவே செய்தது. கர்த்தரின் ஈவுகளை எவ்வளவு சீக்கிரம் மறந்துபோகிறோம்? புதிதாக பிரச்சனை வரும் வரைக்கும் விசுவாசம் காணாமல் போகிறது. ஒன்றுமில்லாமையில் இருந்து சர்வத்தையும் படைத்தவர் நம் கண்களினால் தற்போது காணமுடியாத வளங்களை தரமாட்டாரா? சின்ன பையன் கொடுத்த சின்ன உணவிலிருந்து பெரும் உணவை உண்டாக்கினார். உங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுவாராக.

அவர்களது பயணத்தில் பெத்சாயிதா வருகிறார்கள். பார்வையற்ற மனிதனை இயேசு அங்கே சந்திக்கிறார். அந்த மனிதனை தனியே அழைத்துச்சொன்று குணமாக்குகிறார். இந்த ஒவ்வொரு செயலும் சீஷர்களுக்கு சொல்லப்பட்டது. விசுவாசத்துடன் வாழ அறிவுறுத்தப்பட்டது. நீங்கள் அவரை காணாத போதும், செயல்படும் அவரை உங்கள் மனக்கண்களால் விசுவாசத்துடன் காண அழைக்கப்படுகிறீர்கள்.

பார்வையற்றவனுக்கு இயேசுவைப் பார்க்க இயலவில்லை. மக்கள் கூட்டமோ அவர் செய்த அதிசயங்களை பார்த்து வாய்பிளந்து நிற்கிறது. சிறிது சிறிதாய் பார்வையற்றவனுக்கு பார்வைவந்ததுபோல அவர் மேல் நாம் வைக்கும் விசுவாசமும் கொஞ்சம் கொஞ்சமாக வளர்தல் வேண்டும். சின்ன விஷயங்களில் விசுவாசம்

வைத்தால், பெரும் காரியங்களை விசுவாசமாய் நாம் செய்து வெற்றி அடைய அவர் உதவுவார்.

இந்த அடையாளம் கடைசியில் இயேசுவின் அடையாளத்தையும், நோக்கத்தையும் வெளிப்படுத்துகிறது. வசனம் 31ல் அவர் கூறுகிறார். ‘‘மனுஷ குமாரன் பலபாடுகள்பட்டு,…..கொல்லப்பட்டு’’ இதற்கு முன்பு பேதுரு ‘‘ கிறிஸ்து என்று அழைத்தார். 29வது வசனம் பார்க்க… பாடுபடுதலையும், கொல்லப்படுவதையும் குறித்து இயேசு சொன்னபோது, பேதுருவே அதை முதலில் எதிர்க்கிறார். கிறிஸ்து என்றும், ராஜா கொலை செய்யப்பட உடன்படுவதா? பைத்தியமாக இல்லை, பேதுரு கோபப்பட்டதற்கு நியாயம் இருக்கிறது. ஆனால் இயேசுவோ அவனை சாத்தான் என்கிறார். பேதுருவின் எண்ணம் சாத்தானின் எண்ணம் என்பதே இயேசுவின் பார்வை. சுவிசேஷத்திற்காக தன் உயிரையும் இழப்பதே ஊழியம். அதுவே நித்திய வாழ்விற்கு முதல்படி. இவ்வுலக வாழ்வைப் பெரிதாக எண்ணுகிறவர்கள், சத்தியத்திற்காக சாகாதவர்கள், நித்திய வாழ்வைப் பெறுவது அரிது. கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் நித்திய வாழ்வைப் பெறுவர். வசனம் 37 கூறுகிறது. ‘‘மனுஷன் தன் ஜீவனுக்கு ஈடாக என்னத்தைக் கொடுப்பான்’’

***இவ்வுலக வாழ்வை அல்ல நித்திய வாழ்வின் தன்மைகளுக்கு ஏற்ப கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் நடக்க வேண்டும்.***

## பாடம் 8 : அத்தியாயம் 9

**பாட வாக்கியம்** : இயேசு தம்முடைய மகிமையை வெளிப்படுத்துகிறார். மெய்யான உயர்நிலைக்கு வழி கூறுகிறார்.

**நாள் 1**

வாசிக்க மாற்கு 9:2-13

1. உயர்ந்த மலை உச்சியில் என்ன நிகழ்ந்தது?
2. மறுரூபம் ஆகும் போது இயேசு என்ன செய்துகொண்டிருந்தார்? (லூக்கா 9:28-30)
3. மூன்று சீஷர்களுக்கும் இயேசு சொன்னது என்ன? வசனம் 9

**நாள் 2**

வாசிக்க மாற்கு 9:14-29

1. மலையின் அடிவாரத்தில் என்ன நிகழ்கிறது?
2. சீஷர்களின் பார்வையினின்றும், பிதாவின் பார்வை என்ன?
3. விசுவாசமின்மையை விசுவாசமாய் மாற்றுவது எது?

**நாள் 3**

வாசிக்க மாற்கு 9:30-41

1. தமக்கு நடக்கப் போகும் மூன்று காரியங்களைக் குறித்து பேசுபவை எவை?

2. சீஷர்கள் என்னத்தைக்குறித்து தர்க்கம் பண்ணுகிறார்கள்?

3. நம்முடைய கலாச்சாரம் “மிக உயர்ந்த நிலை” எதுவென்றும், என்னவென்றும் கருதுகிறது?

4. நம்முடைய கலாச்சாரத்தில் இயேசு மிகவும் உயர்ந்தவர் என்று கருதப்படுவாரா?

<u>நாள் 4</u>

வாசிக்க மாற்கு 9:35-41

1. கர்த்தரின் உயர் நிலை என்பது என்ன? (பார்க்க மத்தேயு 5:19, 20:25-28)

2. ஒரு வேலைக்காரனைப் போன்று உங்களிடம் நடந்துகொண்ட நண்பர் யாரும் உங்களிடத்தில் உண்டா?

3. சகிப்புத்தன்மை மற்றும் மரியாதையுடன் பழகுதல் குறித்து இயேசு கூறியது என்ன? (38-41)

**<u>நாள் 5</u>**

வாசிக்க மாற்கு 9:42-50

1. உப்பின் மற்றும் அக்கினியின் தன்மைகளை பற்றி பேசுக.

2. இந்தப்பகுதியில் நாம் கற்கும் ஆவிக்குரிய தன்மைகள் என்னென்ன? ( மத்தேயு 5:13, லூக்கா 14:34-35)

**<u>நாள் 6</u>**

**பாடம் 8 : "மலையின் மீதான அனுபவம்"**

---

**பாடம் : 9**

**முக்கிய வசனம்** : மாற்கு 9:35 "எவனாகிலும் முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் கடையானவனும், எல்லாருக்கும் ஊழியக்காரனுமாயிருக்கக்கடவன்"

**பாட வாக்கியம் :** இயேசு தம்முடைய மகிமையை வெளிப்படுத்துகிறார். மெய்யான உயர்நிலைக்கு வழி கூறுகிறார்.

**வாழ்வு நெறி** : கிறிஸ்துவின் சகோதரர்கள் முதலில் வேலைக்காரர்கள்.

**சுருக்கம்**

இயேசு மறுருபமடைகிறார், பிசாசு பிடித்தவனைக் குணப்படுத்துகிறார், தம்முடைய மரணத்தைப்பற்றிக் கூறுகிறார், உயர்நிலை குறித்து போதிக்கிறார். இயேசு பேதுருவையும், யோவானையும், யாக்கோபையும் கூட்டிக்கொண்டு மலைக்கு போகிறார். இயேசு ஜெபிக்கையில் அவரது சரீரத்தில் நித்தியத்திற்காக மகிமை வெளிப்படுகிறது. அவரது முகம் ஒளி பொருந்திய வெளிச்ச வெள்ளத்தில் திகைக்கிறது. அவரது ஆடைகள் வெண்மையாகிறது. அவரது முழு உடலும் பிரகாசமாகிறது. யோவான் 17:5ல் இயேசு கூறுகிறார். "உலகம் உண்டாகிறதற்கு

முன்னே உண்டான மகிமையால் என்னை மகிமைப்படுத்தும்'' எலியாவும், மோசேயும் அங்கே தோன்றுகின்றனர். மோசே நியாயப்பிரமாணத்தையும், எலியா தீர்க்கதரிசனத்தையும் கூறுகின்றார். இரண்டாம் முறை இவரே என் நேசக்குமாரன் என்று பிதா உறுதிகூறுகிறார். முதல் முதலில் இச்சம்பவம் இயேசுவின் ஞானஸ்நானத்தின் போது நிகழ்ந்தது. இயேசு பிதாவின் திருமைந்தன். அவருக்கு செவிகொடுக்க வேண்டும். மேசியா வந்துவிட்டார் இயேசுவாக.

இயேசு பேதுருவுடனும், யோவானுடனும், யாக்கோபுடனும் மலைக்கு சென்றிருந்த போது, மற்ற சீஷர்கள் சாத்தானை அடக்குவதில் போரட்டம் நடத்திகொண்டிருந்தனர். பற்றாக்குறையில் வேதபாரகர்களும் அவர்களுடன் தர்கித்துக்கொண்டிருந்தனர். பெருங்கூட்ட ஜனம் சீஷர்களை சுற்றி நின்றிருந்தது.

ஊமையான ஆவி பிடித்த மகனை உடைய தகப்பனின் வேண்டுகோளை அவர்களால் தீர்க்க முடியாமற்போயிற்று. ''நீர் ஏதாகிலும் செய்யக்கூடுமானால், எங்கள் மீது மனதுருகுங்கள். எங்களுக்கு உதவி செய்யுங்கள் என்று வேண்டும் தகப்பனின் கண்ணீர் இயேசுவுக்கு முன் நின்றது, நமது வேண்டுகோள்கள் நிறைவேறாமல் போனபோது, கர்த்தரிடமே விண்ணப்பிக்க நாம் முன் வருவதில்லையா? இயேசு கூறுகிறார். ''விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்''

அத்தியாயத்தின் தொடக்கத்தில் மூன்று சீஷர்களை மட்டும் இயேசு கூட்டிச்சென்றதாக வாசிக்கிறோம். ஆனால் மலையில் இருந்து இறங்கி வந்ததும் சீஷர்களுக்குள் சண்டை, எவன் பெரியவன் என்று? இயேசுவின் பதில் சிறு குழந்தையினின்றும் புறப்படுகிறது. இயேசு கூறுவது என்னவெனில் ஒவ்வொருவரும் மேன்மையுள்ளவாகளே. அவன் பெரியவன் என்றும் இவன் பெரியவன் என்றும் பேசுவது கர்த்தருக்கு எதிரானது. இயேசுவைப் பொறுத்தவரை மேன்மையாக இருக்க விரும்புகிறவன், கடைசி நிலை ஊழியக்காரனின் பண்புகளை பெற்றுக்கொள்ள வேண்டும். இடையில் யோவான் குறுக்கிட்டு நம்மை பின்பற்றாதவன் உமது நாமத்தில் (இயேசுவின நாமத்தில்) பிசாசுகளை துரத்துகிறான் என்றார், இவை அனைத்திற்கும் இயேசுவின் பதில் ஒன்றே, தாழ்மையான ஊழியக்காரனாயிரு என்பதே, உலகில் பெரும் மனிதர்களாக மதிக்கப்படுதல் என்பது வேறு, எபிரெயர் கூறுவது, இயேசுவே படைப்பில் மிக உயர்ந்த நிலையை உடையவர் என்று

எனினும் அவர் வேலையாளாக வந்தார். தம்மை நமக்கு தர வந்தார். அவ்விதம் நாம் வேலையாளாக இருந்து, கர்த்தரை பின்பற்றுவோம்.
இங்கே ஓர் குழந்தையை அவமதித்தலைப் பற்றி இயேசு கூறுகிறார், பாவத்தை நம்மேல் திணிக்கும் எதுவும் சிலுவையில் அறையப்பட வேண்டும். பாவத்தின் தீவிரத்தை நமது உடலில் காட்டும் எதையும், அது கசப்பும், வெறுப்பும், பெருமையும், பொறாமையும், இச்சையும் வேறு எந்தப் பாவம் இருந்தாலும் சிலுவையில் அறையப்பட வேண்டும். இவை எல்லாவற்றையும் சாவுக்குட்படுத்த வேண்டும். சாவுக்குரியவைகளை சிலுவையில் அறையவில்லையெனில் ஆவிக்குரிய வாழ்வில் அது நமக்கு பிரச்சனையாக இருக்கும். நமது பாவத்தைக்குறித்து நாம் நேர்மையாய் நடந்துககொள்ள வேண்டும். ஒளிவு மறைவு எதுவும் கர்த்தரிடத்தில் இருக்கவே கூடாது. நமது உப்புத்தன்மையை நாம் இழக்கக் கூடாது. நமது பாவத்தின் மீது அவரின் வெளிச்சம் விழட்டும். நாம் அவற்றை அறிக்கையிட்டு நேர்மையுடன் வாழ்வோம்.

முடிவாக, ஒவ்வொரு மனிதனையும் நாம் மதிப்புடன் நடத்திட வேண்டும். காரணம் ஒவ்வொருவரும் கர்த்தரின் படைப்பே, மனித மேம்பாட்டிற்கு நாம் உழைத்திட வேண்டும். வாய்ப்புக்கிடைத்தால் மலை உச்சியில் யாரும் எட்ட முடியும். அவரது வல்லமை நம்மிடத்தில் இருந்தால் நாம் உயர்வு பெறுவோம் நாம் கர்த்தரின் பிள்ளையாக வாழ உயர அழைக்கப்பட்டிருக்கிறோம். (2 பேதுரு 1:3)

***கிறிஸ்துவின் சீஷர்களே முதலாவது வேலைக்காரர்கள் நீங்களும் நானும் தான்.***

**பாடம் 9 :** அத்தியாயம் 10

**பாட வாக்கியம்** : ஊழியம், சேவை மற்றும் துன்பம் ஏற்றலுக்காக இயேசு அவர்களின் இருதயத்தை தயார் செய்கிறார்.

**<u>நாள் 1</u>**

வாசிக்க மாற்கு 10:1-12

1. பரிசேயர்களின் கேள்விக்குப் பின்னாலுள்ள நோக்கங்கள் எவை?
2. திருமணத்தைப்பற்றிய இயேசுவின் பார்வை என்ன?

**<u>நாள் 2</u>**

வாசிக்க மாற்கு 10:13-16

1. வசனம் 15ல் இயேசு கூறுவது என்ன?
2. குழந்தைகளிடம் காணப்படும் பண்புகளை் எவை? தேவனுடைய இராஜ்ஜியத்தில் சேர்க்கப்படும் பண்புகள் எவை எவை?
3. குழந்தைகளின் மீதுள்ள தமது அன்பை இயேசு எப்படித் தெரிவிக்கிறார்?

**<u>நாள் 3</u>**

வாசிக்க மாற்கு 10:17-27

1. இயேசுவைப் பின்பற்றுவதின்றும், பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைப்பதிலும் இருந்து இந்த இளைஞனைத் தடை செய்தது என்ன?

2. அவர்கள் மத்தியில் நடந்த உரையாடலில் வசனம் 17,18ஐ பார்க்க, இயேசு அவனிடம் கூறுவது என்ன?

3. வசனம் 27ல் கூறப்படும் வாக்குத்தத்தம் என்ன?
4. இயேசுவைப்பின்பற்றுவதில் அதிசயம் இழப்பு ஏற்படுமா? வசனம் 29

5. இயேசுவைப்பின்பற்றுவதில் உங்களை தடைசெய்தது என்ன?

<u>நாள் 4</u>

வாசிக்க மாற்கு 10:28-34

1. எருசலேமிற்கு போகும் வழியில் சீஷர்கள் பயப்படத்தக்கதாக இயேசு என்ன கூறினார்?

2. யாக்கோபு மற்றும் யோவானின் கேள்வி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

3. யாக்கோபு, யோவான் மீது மற்ற பத்து சீஷர்களின் எதிர்விசை என்ன? ஏன்?

4. இயேசு கூறும் பாத்திரம் என்ன?

5. இயேசுவின் பார்வையில் "பெரியவனாயிருத்தல்" என்பது என்ன?

6. பெரியவனாயிருத்தல் குறித்து இந்த அதிகாரம் கூறுவது என்ன?

7. மாற்கு 10:45 மனுஷ குமாரன் ஊழியம் கொள்ளும் படி வராமல் ஊழியம் செய்யவும்......." நினைவில் கொள்ள மனனம் செய்க.

**நாள் 5**

வாசிக்க மாற்கு 10:46-52

1. சரீரத்தில் பார்வையின்மையா? ஆவிக்குரிய பார்வையின்மையா? எது மோசம்?

2. பர்த்திமேயுவின் எந்த செயல் நமக்கு சவால் விடுகிறது?

3. இயேசு இப்பகுதியிலிருந்து உங்களுடன் பேசும் உண்மை ஏதாவது?

**நாள் 6**

**பாடம் 9 : "யூதேயாவிலும் எருசலேமிலும் ஊழியம்"**

---

**பாடம்** : மாற்கு 10

**முக்கிய வசனம்** : மாற்கு 10:45 "அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்"

**பாட வாக்கியம்** : ஊழியம் மற்றும் சேவை மற்றும் துன்பம் ஏற்றலுக்காக இயேசு அவர்களின் இருதயத்தை தயார் செய்கிறார்.

**வாழ் நெறி** : இளைஞரோ முதியவரோ, வசதி படைத்தவரோ, ஏழையோ, நாம் பாவிகள். நம்மை நாமே மீட்டுக்கொள்ள தகுதியற்றவர்கள்.

**சுருக்கம்** : விவாகரத்தைக்குறித்து இயேசு பேசுகிறார், சிறு குழந்தைகளை ஆசீர்வதிக்கிறார், ஐசுவரியவானான இளைஞனுக்கு ஆலோசனை வழங்குகிறார், தமது சொந்த மரணத்தைக் குறித்து பேசுகிறார், யாக்கோபையும், யோவானையும் சீர்ப்படுத்துகிறார். பாத்திமேயு பார்வையற்ற அவனை குணப்படுத்துகிறார்.

விவாகரத்தைப்பற்றி பேசி அவருடன் விவாதத்தை பரிசேயர் ஆரம்பிக்கின்றனர். தேவத்துவத்தின் பார்வைக்கு அவர்களை அழைத்துச்செல்கிறார். அவர்களோ மேசியாவின் நியாயப்பிரமாணத்தைக்குறித்து சொல்ல, நியாயப்பிரமாணத்தின் இருதயமான இரக்கத்தை குறித்து இயேசு பேசுகிறார். "உங்கள்

இருதயக்கடினம்’’ என்கிறார். பின்பு ஆதியாகமத்தை குறிப்பிட்டு, ஆதியிலே மனிதனை ஆணும், பெண்ணுமாக ஜோடியாக உருவாக்கினார் என்கிறார். தவிர இந்த ஜோடி ஓரே மாம்சமாக வேண்டும். இவர்கள் ஒருவரையொருவர் அனுசரித்து தோழமை செய்து இருவர் ஒருவராக வேண்டும். தவிர இவர்கள் கடவுளின் முன்னிலையில் சமமே. பவுல் கூறுகிறார், யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை; நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். (கலாத்தியர் 3:28) இருவர் ஒருவராக வாழ எடுக்கும் பயணம். அவர்கள் ஒருவரை ஒருவர் மதித்து வாழ்தல் அது நடக்கும். இதுவே கர்த்தரை ஆராதிக்கும் முறை. கிறிஸ்துவும் இப்படியே நம்மில் அன்புகூறுகிறார். எபேசியர் 5:28-33ன் படி திருமண உறவு ரகசியமான தேவ உறவுக்குச்சமம். தவிர கர்த்தர் மனித இருதயங்களை பயன்படுத்துகிறார். அவர் குடும்பத்தை கட்டுகிறார். அன்பையும், ஏற்றுக்கொள்ளலையும், மன்னிப்பையும் அளிக்கிறார்.

அவர் இவ்வாறு போதிக்கும் போது, குழந்தைகளை அவரிடத்தில் கொண்டு வருகின்றனர். அவர்களை ஆசீர்வதிக்கும் படியாக அழைக்கிறார். சீஷர்கள் அவர்களை அதட்டுகின்றனர். இப்போதும் சீஷர்களின் கவனமெல்லாம் இயேசுவின் ஊழியத்திற்கு தடைவந்து விடக்கூடாதே என்ற நல்லெண்ணம் தான். ஆனால் அவர்களுக்கு பெரியவனாயிருத்தல் குறித்த இயேசுவின் போதனை இன்னும் விளங்கவில்லை. எனவே இயேசு மீண்டும் இடைபடுகிறார். ‘‘எவனாகிலும் சிறுபிள்ளையைப்போல் தேவனுடைய இராஜ்ஜியத்தை ஏற்றுக்கொள்ளா விட்டால் அவன் அதில் பிரவேசிப்பதில்லை என்றார். குழந்தைகளுக்கு இயேசுவிடம் வரும் பண்புகள் உள்ளன. அவர்கள் எளியவர்கள், இருப்பதை இருக்கிறது என்கிறார்கள். என்ன பார்க்கிறார்களோ அதைக் கூறுகிறார்கள். சிந்திக்கிறவர்கள், பெற்றோர் செய்வதை அப்படியே நம்புகிறவர்கள், போதித்துச்சொன்னால் அப்படியே கற்றுக்கொள்கிறவர்கள். ஒன்றைச்சொல்லி இன்னும் ஒன்றைச் சொல்லத்தெரியாதவர்கள். நாம் சொல்வதை செய்கிறவர்களாக இருக்க வேண்டின குழந்தைகளாவோம்.

இதைப்போலவே இந்த இளைஞன் சுவிசேஷத்தின் மையப்பொருளை மறுந்துபோனான். சொத்துக்களின் மத்தியில் பிறந்தான். சுகபோகம் கண்டான்.

கர்த்தரின் நியாயப்பிரமாணத்தை அச்சுப்பிழையின்றி செய்தான். எனினும் தன்னிடத்தில் உள்ள “நான் நல்லவன்” என்ற பெருமை அவனைவிட்டு நீங்கவில்லை. இயேசு அவன் இருவழிகளிலும் சவால் விடுகிறார். அவன் சொத்து, அவன் பெருமை இரண்டையும் எதிர்க்கிறார். குழந்தையைப்போல அவன் ஆக விரும்புகிறார். இயேசு சொன்ன காரியங்களை நிறைவேற்ற அவன் விருப்பமில்லாதவன் ஆகிறான். முதலில் இயேசு பிதா மட்டும் நல்லவர் என்கிறார். “உனக்கு உண்டான யாவற்றையும் விட்டுவிடு” என்று கூறியது அவனுக்கு அதிர்ச்சியை உண்டாக்கியது. அந்த இளைஞன் வேறொரு கடவுளுக்கு அடிமையாயிருந்தான். தன்னுடைய ஐசுவர்யம் தரும் பெருமை, பதவி, உயர்நிலை, சுகபோகம் தரும் யாவற்றையும் விட்டு விட அவன் தயாராக இல்லை. பணத்திற்கும், கடவுளுக்கும் ஒரே சமயத்தில் ஊழியம் செய்ய இயலாது என்கிறார். இயேசு வசனம் 23-27ல் இயேசு “ஐசுவரியத்தின் நம்பிக்கையாயிருக்கிறவர்கள், தேவனுடைய ராஜ்ஜியத்தில் நுழைய முடியாது என்கிறார்” எனினும் தேவனால் கூடும் என்றும் கூறுகிறார். அந்த உண்மைக்காக ஸ்தோத்திரம். வசதியானவர்களோ, ஏழையோ நாம் கர்த்தரிடம் வந்துள்ளோம். பாவம் நமது உடலில் குடிகொண்டுள்ளது. இயேசுவை பின்பற்ற எல்லாவற்றையும் இழக்க நெரிடும். நமக்கு கொடுக்கப்படுகிற யாவையும் குறித்து நல்ல கணக்கு கொடுக்க வேண்டும். நமது நேரம் உடமை அனைத்தும் கர்த்தரின் நன்கொடை. 1 தீமோத்தேயு 6:17-19ன்படி “பரலோகத்தில் சேர்க்கும் பொக்கிஷமே நமக்கு மெய்யான வாழ்வுதரும்.

மீண்டும் அவர்கள் எருசலேமிற்கு பயணம் செய்கையில் ஒவ்வொருவருக்கும் வேறு வேறு இலக்கு இருக்கிறது. எருசலேம் சென்ற பிறகு தனக்கு நேரிடும் மரணத்தைக் குறித்து இயேசு பேசும் போது, சீஷர்களுக்குள் எவன் பெரியவன் என்ற விவாதம் எழும்புகிறது. யார் தேவனுடைய இராஜ்ஜியத்தில் எந்தப்பதவி என்பதில் அவர்களுக்குள் போட்டி யார் வலது பக்கம் அமர்தல்? யார் இடது பக்கம் அமருதல்? ஆனால் இயேசுவோ அந்தப பதவி பெற பெரும் இழப்புகளை சந்திக்க

வேண்டும் என்கிறார். அது அவர்களின் உயிராகவும் இருக்கக் கூடும். “நீங்கள் கேட்டுக்கொள்வது இன்னது என்று உங்களுக்குத் தெரியவில்லை” என்கிறார் இயேசு. பதவியைப் பெற எந்த இழப்புகளையும் சந்திக்க தயாராக அவர்கள் கூடும் என்கிறார்கள். வசனம் 39. உண்மையைச்சொன்னால் ஓடிப்போவார்கள் என்பதால் இயேசு கூறுகிறார். “நான் குடிக்கும் பாத்திரத்தில் நீங்கள் குடிக்கவும் நான் பெறும் ஸ்நானத்தை நீங்கள் பெறவும் தயாராகுங்கள் என்கிறார். ஆனால் யார் வலது பாரிசத்திலும் யார் இடது பாரிசத்திலும் உட்கார்வது யாருக்கோ ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறது என்கிறார். சிலுவையில் இரு பக்கமும் அறையப்பட்ட கள்ளர்களையா கூறுகிறார்? நமது பாடத்தில் அவரின் அற்புத செயல்களைக் காண்போம். பின்னர் சீஷர்களுக்கு போதிக்கும் காரியங்களை பார்த்தோம். இந்த இயேசுவின் வார்த்தைகளையும் செயல்களையும் குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? பெரியவனாகுதல் என்பதின் பொருள் அறிகின்றீர்களா? உங்கள் இலக்கையும் நோக்கத்தையும் அது மாற்றி விட்டதா? உங்கள் மன உருக்கம் நிறைவாயிற்றா? கர்த்தரிடம் உங்கள் நம்பிக்கை உறுதியாயிற்றா?

***இளைஞரோ, முதியவரோ, ஏழையோ, வசதி படைத்தவரோ யாவரும் பாவிகளாய் அவர் முன் வருகிறோம். நம்மை மீட்க வழியில்லாமல் அவரே நமக்கு மீட்பு.***

## பாடம்10 : அத்தியாயம் 11

**பாட வாக்கியம்** : சிலுவைக்கு முன்னதாக இயேசு தமது கடைசி வார ஊழியம் செய்ய எருசலேம் செல்கிறார்.

**<u>நாள் 1</u>**

வாசிக்க மாற்கு 11:1-11

1. தமது சீஷர்கள் என்ன செய்ய வேண்டுமென்று இயேசு விரும்பினார்?
2. இயேசு பண்பைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
3. இயேசுவை சந்தித்த மக்களின் வார்த்தை மற்றும் செயல்கள் என்ன என்ன?
4. சகரியா 9:9ன் படி நிறைவேறும் 500 வருட முன்பான தீர்க்கதரிசனம் என்ன?

**<u>நாள் 2</u>**

வாசிக்க மாற்கு 11:12-19

1. ஏசாயா 34:2-4 மற்றும் ஓசியா 9:10,16ன்படி அத்திமரம் குறித்த பொருள் என்ன?
2. அத்திமர உவமைக்கும் இயேசுவின் ஆலயச்சுத்திகரிப்பிற்கும் உள்ள ஒற்றுமைகள் யாவை?

3. நம்முடைய சரீரம் ஆலயமே இதைக்குறித்து உங்கள் பார்வை என்ன? (பார்க்க 1 கொரிந்தியர் 6:19-20, 2கொரிந்தியர் 6:14-16)

**நாள் 3**

வாசிக்க மாற்கு 11:20-24

1. பேதுரு என்ன பார்த்தார்? இயேசு அவருக்கு சொன்ன பதில் என்ன?
2. எபிரெயர் 11:1ன் படி விசுவாசத்தின் பொருள் என்ன?
3. இந்தப்பகுதியில் விசுவாசத்திற்கு எதிர் நிற்கும் மலை எது?

**நாள் 4**

வாசிக்க மாற்கு 11:24-26

1. நமக்கு எதிரிடையாக ஒருவர் இருக்கும் போது ஜெபம் தொடங்கு முன்னர் நாம் என்ன செய்ய வேண்டும்? வசனம் 24,25
2. பாவமன்னிப்புச் செய்யாமையும், சந்தேகமும் ஒன்றா?
3. சந்தேகம் இருக்கும் எனில் ஜெபித்தால் கர்த்தர் பலனளிப்பாரா?
4. உங்கள் ஆலயம் எப்படியுள்ளது?

**<u>நாள் 5</u>**

வாசிக்க மாற்கு 11:27-33

1. இயேசுவின் அதிகாரம் பற்றி கேள்வி எழுப்ப மதவாதிகள் துணிந்தது ஏன்?

2. எந்த அதிகாரம் கொண்டு யோவான் ஸ்நானகன் தன் ஊழியத்தை செய்தார்? (லூக்கா 1:11-17, யோவான் 1:6-8)

3. எந்த அதிகாரத்தால் இயேசு தன் ஊழியத்தை ஆரம்பித்தார்? (யோவான் 12:49-5
4. எந்த அதிகாரத்தில் நாம் ஊழியம் செய்கிறோம்? (மத்தேயு 28:18-20, மாற்கு 16:15-18, அப்போஸ்தலர் 1:4-8)

**<u>நாள் 6</u>**

**பாடம் 10 : " பாடுபட்ட வாரம்" எதர்விசைகளும், சிறைப்படுதலும்"**

---

**பாடம் :** மாற்கு 11

**முக்கிய வசனம்** : மாற்கு 11:22 தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர்களாயிருங்கள்.

**பாட வாக்கியம்** : சிலுவைக்கு முன்னர், இயேசு தமது கடைசி வார ஊழியத்திற்கென்று எருசலேம் செல்கிறார்.

**வாழ்வின் நெறி** : கிறிஸ்துவை பின்பற்றுவோர் கர்த்தரையே தொழுவர். அவருடைய வழிநடத்துதலில், மட்மே நம்பிக்கை கொள்வர்.

**சுருக்கம்** : இயேசு எருசலேமில் நுழைகிறார். அத்திமரத்தை சபிக்கிறார். ஆலய சுத்திகரிப்பு செய்கிறார்.

எருசலேமிற்குள் இயேசு நுழைகையில் சகரியா 9:9 தீர்க்கதரிசனதம் நிறைவேறுகிறது. பஸகா பண்டிகையின் நாட்களில் இயேசுவின் காலத்தில் எருசலேம் வரும் மக்களின் எண்ணிக்கை 80,000லிருந்து 2,50,000மாக உயரும்.

பெரும்பான்மை யாத்ரீகர்கள். இயேசு தம் வருகைக்கு முன்பாக, தம் சீஷர் எருசலேமிற்கு சென்று ஒரு கழுதையை கொண்டு வர சொன்னார், யாராவது வினவினால், ஆண்டவருக்கு கழுதைக்குட்டி தேவை என்றும் உபயோகித்து முடித்த பின்பு அதைத்திருப்பி அனுப்பிவிடுவார் என்றும் கூறச் சொல்லியிருந்தார் இயேசு உங்களிடம் ஏதும் கேட்டால் தருவீர்களா?

அடுத்த நாள் இயேசுவுக்கு பசி. அத்திமரம் கண்ணில் பட்டது. அத்திப்பழம் ஏதுமில்லை. கனி இல்லாததால் அதை சபிக்கிறார். சபித்தலின் மூலம் விசுவாசம், ஜெபம், மன்னிப்பு ஆகியவற்றை விளக்குகிறார். இயேசு பார்த்த போது அது இலைகளுள்ள செழிப்பான அத்திமரமாயிருந்தும் கனிகளில்லை. அத்திமரம் இஸ்ரவேலுக்கு ஒப்பாக கருதப்பட்டது. இலைகளாய் மதவாதம் அதில் இருந்ததே ஒழிய, அதில் நீதி என்னும் கனி இல்லை, சபித்தல்

இயேசுவின் வாயிலிருந்து வருகிறது. கனியில்லாமல் நம் வாழ்வு இன்றும் இருக்கிறதா?

அத்திமரத்தின் மீதான சாபமே எருசலேம் நகரின் மீதான சாபம், ஆலயத்தின் மீதான சாபம், ஆலயம் கர்த்தரின் நோக்கத்தை நிறைவேற்றவில்லை. ஆலயத்தில் நுழைந்த இயேசு சாட்டை ஒன்றை எடுத்தார். இந்த உதாரணம் எளிமையும், தாழ்மையுமான இயேசுவிடம் எதிர்பார்க்கப்பட வில்லை. இங்கே தம் பிதாவின் வீட்டை பாதுகாக்கும் கோபக்கார வீரனாக இயேசு வருகிறார். தேசத்தின் மையம் ஆலயம். அதில் வாழ்வு சிறக்க வேண்டும் மாறாக அதில் தேள்களும், பாம்புகளும் குடியிருந்தன. பார்க்க 1 கொரிந்தியர் 6:19-20, மற்றும் 2 கொரிந்தியர் 6:14-16. நம்முடைய சரீரமும் தேவனுடைய ஆலயமே. தமது மக்கள் மத்தியில் கடவுள் வாசம் செய்கிறார். ஜனங்களின் மத்தியில் தேவாதி தேவன் வாசம் பண்ணும் போது, ஜனங்கள் நீதி செய்யவேண்டும்.

அத்திமர உவமையை இயேசு கூறி, கர்த்தரிடம் விசுவாசமாயிருக்க இயேசு வேண்டுகிறார். விசுவாசத்துடன் நாம் விண்ணப்பிக்கும் ஜெபம் பலன் தரும் என்கிறார். இடையில் மன்னிப்பு, சந்தேகம் இவற்றுக்கு பதிலும் தருகிறார். நம்முடைய ஜெபத்திற்கு பலன் வேண்டுமெனில் நமது மனச்சாட்சி சுத்தமாயிருக்க வேண்டும்.

இவ்விதமான அதிகார உபதேசம் மதவாதிகளுக்கு எரிச்சலை மூட்டியது. அவரோ காத்தரை அறிந்தவராக பேசுகிறார். பற்றாக்குறைக்கு எதிர்கேள்வி கேட்கிறார். "யோவான் கொடுத்த ஞானஸ்நானம் தேவனால் உண்டாயிற்றா அல்லது மனுஷனால் உண்டாயிற்றா எனக்கு உத்தரவு சொல்லுங்கள் என்கிறார்கள். யோவானுக்கோ, இயேசுவுக்கோ மனித அதிகாரங்கள் அவசியப்படவில்லை. பிதாவின் சித்தப்படி ஊழியம் செய்வர்களுக்கு என்ன சான்றிதழ் தேவை? அவர்கள் காத்தரிடம் விசுவாசம் வைக்கிறார்கள். அவரையே தேடுகிறார்கள். (மத்தேயு 28:18-20, மற்கு 16:15-18, அப்போஸ்தலா் 1:4-8) நமது ஆண்டவரின் அதிகாரம் பிதாவிடத்தில் இருந்து வந்தது.

***சிலுவையைப் பின்பற்றுவோர் கர்த்தரையே தொழுவர்***

**பாடம் 11 :** அத்தியாயம் 12

**பாடவாக்கியம்** : " கீழப்படிதலுக்கு இயேசு பொருள் தருகிறார்"

**நாள் 1**

வாசிக்க மாற்கு 12:1-12 மற்றும் ஏசாயா 5:1-7

1. திராட்சைத்தோட்டத்தை (இஸ்ரவேல்) எவ்விதம் கர்த்தர் உருவாக்கினார்?
2. தோட்டக்காரரின் எதிர்பார்ப்பு என்ன?
3. குத்தகைக்காரர் யார்? அவர்கள் எவற்றைச் செய்தார்கள்?
4. தோட்டக்காரரின் வேலைக்காரர்களுக்கு என்ன நிகழ்ந்தது?
5. பிரியமான குமாரனின் பணி என்ன?
6. தோட்டக்காரர் தன் மகனைக் கொன்று விட்டார்கள் என அறிந்ததும் என்ன செய்தார்?
7. இந்த உவமை குறித்து மதவாதிகளின் எதிர்விசை என்ன? ஏன்?

**நாள் 2**

வாசிக்க மாற்கு 12:13-27

1. பரிசேயர் சிலரும் ஏரோதியர் சிலரும் இயேசுவைத் தேடி வந்த நோக்கமென்ன?

2. இயேசு அவர்கள் கேள்விக்கு என்ன பதில் தந்தார்?

3. அவர்களது எண்ணங்களுக்கு மூலமாக இயேசு கூறுவது என்ன? வசனம் 24

4. இன்றும் அதே பிரச்சனைகள் இருக்கிறதா?

**<u>நாள் 3</u>**

வாசிக்க மாற்கு 12:28-34

1. எந்தக்கற்பனை பிரதானமானது? (உபாகமம் 6:4-5)

2. தேவ அன்பின் நான்கு பரிமாணங்கள் யாவை? வசனம்29,30

3. இரண்டு கற்பனைகளும் எவ்வாறு ஒவ்வொன்றும் பொருந்திப்போகின்றன?

**<u>நாள் 4</u>**

வாசிக்க மாற்கு 12:35-44

1. எவ்விதம் இயேசு தாவீதின் அரசரும், தாவீதின் குமாரனுமாக இருக்கிறார்?

2. நியாயப்பிரமாண போதகர்களின் நிலை என்ன?

3. அவர்கள் என்ன விரும்புகின்றனர்?

4. விதவையைக் குறித்து இயேசுவின் பார்வை என்ன?

**நாள் 5**

குறிப்பாக வாசியுங்கள்

1. தம்மைப் பின்பற்றுகிறவர்களிடமிருந்து எவ்வகை பலிகளை கர்த்தர் எதிர்பார்க்கிறார்?

   அ. ரோமர் 12:1,2

   ஆ. பிலிப்பியர் 4:14-18

   இ. எபேசியர் 5:1-2

   ஈ. எபிரெயர் 13:15-16

   உ. சங்கீதம் 51:1

2. நீங்கள் கர்த்தருக்கு செலுத்தும் பலிகள் என்ன?

**நாள் 6**

**பாடம் 11** : இயேசு கற்றுக் கொள்ளும் இருதயத்தை பார்க்கிறார்.

**பாடம்** : மாற்கு 12

**முக்கிய வசனம்** : மாற்கு 12:24 - நீங்கள் வேதவாக்கியங்களையும், தேவனுடைய வல்லமையையும் அறியாததினாலல்லவா தப்பான எண்ணங் கொள்ளுகிறீர்கள்?

**பாட வாக்கியம்** : தங்களுடைய எல்லாவற்றாலும் கிறிஸ்துவினுடையவர்கள், கர்த்தரை நேசிக்கின்றனர்.

**சுருக்கம்** : உவமைகளில் இயேசு பேசுகிறார். மதத்தலைவர்கள் இயேசுவை நியாயப்பிரமாணம் அடுத்த கேள்விகள் கேட்கின்றனர். கற்பனைகளில் பெரிதான கற்பனைகளை இயேசு கூறுகின்றார். விதவை இரண்டு நாணயங்கள் காணிக்கை தருகின்றாள்.

இயேசுவை குற்றம் சாட்டுவதற்கு வகை தேடிய யூத மதத்தலைவர்களுக்கும், இயேசுவுக்குமிடையே உள்ள குழப்பங்களில் மாற்கு 11-12 அதிகாரங்களில் கவனம் செலுத்துகிறார். இயேசு அவர்களுடைய முயற்சிகளை தாண்டி செல்லவில்லை. இருதயத்தில் பகையினாலும், பொறாமையினாலும் நிறைந்த இதயங்களுக்கு ஊழியம் செய்யும் நோக்கத்துடன்

இயேசு காணப்பட்டார். அவர்கள் தேவனுடைய வார்த்தைதையும், வல்லமையையும் அறியவில்லை. தேவனுடைய அதிகாரம் எல்லாக் காலங்களையும், உண்மைகளையும் கடந்து செல்கிறது.

இயேசு மீண்டும் இஸ்ரவேலின் நேர்மையற்ற தன்மையை வெளிப்படுத்துமளவில் ஒரு உவமையை சொல்கிறார். அவர்கள் தேவனுடைய அதிகாரத்தை குறித்து கவலைப்படாமல் சுயநலமாயிருந்தார்கள். அவர் ஏசாயாவின் வார்த்தைகளை எடுத்து அதில் நேசம் திராட்சை செடியாக காட்டப்பட்டிருப்பதை விவரித்தார். இந்த உவமை அவருடைய பொறுமையும் நீதியின் கோபத்தையும் வெளிப்படுத்துகிறது. தேவனுடைய உக்கிராணக்காரர்களுக்கு இது எச்சரிக்கையாக இருக்கிறது.

முற்றிலும் புறக்கணித்து விடுதல் உங்கள் வாழ்வையும், அதன் நோக்கத்தையும் இழக்கச் செய்யும். தேவனுடைய குமாரனுக்கு எனது பதில் என்ன? தேவன் என்னிடத்தில் ஒப்படைத்த பொறுப்புகளை எப்படி வெளிப்படுத்துகிறேன்? நியாயப்பிரமாண போதகர், பிரதான கட்டளை எது என்று கேட்ட போது உபாகமம் 6:4-5 வசனங்களை குறிப்பிட்டார். இது யூதர்களின் விசுவாசப் பிரமாண அறிக்கையாகும். இரண்டாம் கட்டளை 'உன்னைப்போல பிறரையும் நேசிப்பாயா'' (12:31) என்று லேவி 19:18 குறிப்பிட்டார். தேவனிடத்தில் அன்பு கூறுவதிலிருந்து தான் ஆரம்பிக்க முடியும். அவர் நம்மை இந்த உலகத்தில் கொண்டு வந்து, வாழ்வு அளித்து, போஷித்து உயிர் அளிக்கிறார். இருதயத்திலிருந்து விசுவாசிக்கலாம் அல்லது புறக்கணிக்கலாம். நம் ஆவி, ஆன்மா, சரீரம் அவரது அன்பில் இயங்க வேண்டும். நம்முடைய அறிவும் இருதயமும் அவரை நேசிக்க வேண்டும். ''உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.'' மத்தேயு 6:21 தவிர மனித நாசி சுவாசம் அவர் தந்தது. சுவாசமுள்ள மனிதர் யாவரும் நமது மக்களே. ரோமர் 12:2 ''நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். ரோமர் 13:5 மனச்சாட்சியினிமித்தமும் கீழ்ப்படியவேண்டும். ரோமர் 10:10-ல் இருதயத்தில் விசுவாசிக்கிறோம் என்று கூறுகிறது நாம் தீர்மானித்து, தேவனை நேசித்து அவரைப்பற்றி படிக்கிறோம். முழு ஆத்துமாவோடு தேவனை

நேசிப்பது என்றால், நமது உணர்வுகள், பயங்கள், காயங்கள், கவலைகள் மற்றும் சந்தோஷத்தை அவர் மேல் வைத்துவிடுவதாகும். முழு மனதோடு தேவனை நேசித்தல் என்றால் நமது மனதில் தேவனை நன்றாக அறிந்திருக்கிறோம் என்பதாகும். மனதில் வேதத்திலிருந்து எவைகளை எடுத்துக் கொள்கிறோமோ அவைகள் தேவனுக்கு கீழப்படிவதற்கு உதவுகிறது.ஏசாயா: 26:3-ல் தேவன் மேல் நமது மனது காணப்பட்டால் பூரண சமாதானம் வரும் என்று கூறுகிறது. தேவனை முழு இருதயம், ஆத்துமா மனதுடன் சேவித்தால் மற்றவர்களுக்கு ஊழியம் செய்யலாம். தேவனுடைய அன்பினால் ஆரம்பித்தால் மட்டுமே மற்றவர்களை நேசிக்க முடியும். விதவையின் சரிதை அவர் தேவன் மேல் வைத்திருந்த தன் இருதயம், ஆத்துமா, மனது, பெலத்தோடு நேசித்த அன்பை வெளிப்படுத்துகிறது. அவர் தனது தரித்திரத்திலிருந்து முழுவதையும் தேவனுக்குக் கொடுத்தார். அவர் முழு இருதயத்தோடு தேவனை நேசித்தார். தன்னைப் போல பிறரையும் நேசிப்பது தான் எந்த கட்டளையை விட மத சடங்கச்சாரத்தைவிட பெரியதாகும். எந்த சிறந்த முறையில் தேவனிடம் நான் அன்பை காண்பிப்பது? மனதிலும், வார்த்தையிலும் மற்றவர்களை நேசிப்பதாக எங்கே நான் அனுதினமும் மற்றவர்களை நேசிப்பதை காண்பிக்கிறேன்.

***தங்களுடைய எல்லாவற்றாலும் கர்த்தரை நேசிப்பவர்களே கிறிஸ்துவின் அடியார்கள்.***

**பாடம் 12** : அத்தியாயம் 13-15

**பாட வாக்கியம்** : இயேசுவின் கடைசி நேரம் வந்தது.

**நாள் 1**

வாசிக்க மாற்கு 13, மத்தேயு 24:36-51

1. என்ன வார்த்தை திரும்பவும் திரும்பவும் கூறப்படுகிறது? (வசனம் 5,9,23)

2. வரப்போகும் காலத்தின' அடையாளங்கள் என்னென்ன? யாரை மட்டும் நாம் நம்ப வேண்டும்?

3. யாருக்கு கடைசி காலம் பற்றி தெரியும்? வசனம் 23.

4. அத்திமர உவமை என்ன கூறுகிறது?

5. வசனம் 33-37ன் படி நமக்கு என்ன ஆலோசனை வழங்கப்படுகின்றது?

6. உங்களது பணி என்ன? வசனம் 34

**நாள் 2**

வாசிக்க மாற்கு 14:1-26

1. பிரதான ஆசாரியர் வேதபாரகர் இவர்களது நோக்கம் என்ன?
2. மரியாள் இயேசு மீது வைத்த அன்பை எப்படி வெளிப்படுத்துகிறார்?

3. மரியாள் செய்த செயலை கண்டவர்களின் எதிர்விசை என்ன? இயேசு அவற்றை எப்படி எதிர்கொள்கிறார்?

4. யாத்திராகமம் 12:1-30ன் படி ஏன் யூதர்கள் பாஸ்காவை கொண்டாடி வருகிறார்கள்?

5. கடைசி இரவில் பாத்திரத்தையும், அப்பத்தையும் இயேசு பகிர்கிறார். அதன் பொருள் என்ன? (மத்தேயு 26:26:28)

6. இந்த வழ்க்கமான திராட்சரசத்தையும் அப்பத்தையும் பகிர்தல் பல திருச்சபைகளில் நடக்கிறது? ஏன் (1 கொரிந்தியர் 11:23-26)

**<u>நாள் 3</u>**

வாசிக்க மாற்கு 14:27-65

1. ஒலிவ மலைக்கு புறப்பட்டு போனார்கள் யார்? யார்?

2. இயேசு சீஷர்களிடம் என்ன கேட்டார்?

3. தனக்கு முன் உள்ள துன்பத்தைச் சந்திக்க முயலும் இயேசுவை நாம் எவ்வாறு சிந்திக்கிறோம்?

4. வசனம் 57ன் படி அவரது விசாரணையில் வந்த முடிவு என்ன?

5. பிரதான ஆசாரியர் என்ன கேள்வி கேட்டார்? இயேசு அதற்கு எவ்விதம் பதில் கூறினார்?

6. முடிவு என்ன? இயேசுவை அவர்கள் எப்படி நடத்தினர்?

7. சீஷர்கள் எங்கே போனார்கள்? (14:27)

**நாள் 4**

வாசிக்க மாற்கு 14:66-72, 15:15

1. இயேசுவை பேதுரு மறுதலித்த காரணங்கள் யாவை?

2. சேவல் கூவியபொழுது பேதுரு என்ன செய்து கொண்டிருந்தார்?

3. பிலாத்து இயேசுவிடம் என்ன கேள்வி கேட்டான? இயேசுவின் பதில் என்ன?

4. யார்? யார்? இயேசுவின் மீது குற்றம் சாட்டினார்கள்? அவர்கள் சுமத்திய குற்றச்சாட்டுகள் என்ன? (லூக்கா 23:1-7)

**நாள் 5**

வாசிக்க மாற்கு 15:16-47

1. படைவீரர்கள் இயேசுவை எவ்விதம் நடத்தினார்கள்?

2. ஏசாயா 50:6-7ஐ இயேசுவின் துன்பத்தோடு ஒப்பிடுக.

3. துன்பங்களிலிருந்தும் நன்மையை கர்த்தர் உருவாக்க இயலும்? (வாசிக்க எபிரெயர் 5:8-9, யாக்கோபு 1:2-4)

4. வசனம் 33 என்ன கூறுகிறது?

5. வசனம் 34ல் இயேசுவின் கூப்பிடுதல் என்ன?

6. வசனம் 38ல் என்ன நிகழ்ந்தது?

7. வசனம் 39ல் நூற்றுக்கு அதிபதியின் பேச்சு என்ன?

8. இயேசுவின் கடைசி வார்த்தை என்ன? அவற்றை குறித்து என்ன கூறுகிறீர்கள்? (லூக்கா 23:46, யோவான் 19:30)

9. அரிமத்தியா ஊரானாகிய யோசேப் செய்த பணி என்ன?

<u>நாள் 6</u>

**பாடம் 12** : **"**தம்முடைய அடியார்களுடன் கடைசி நாள்**"**

---

**பாடம்** : மாற்கு 13-15

**முக்கிய வசனம்** : மாற்கு 13:37 "நான் உங்களுக்கு சொல்லுகிறதை எல்லோருக்கும் சொல்லுகிறேன். விழித்திருங்கள் என்றார்."

**பாட வாக்கியம்** : இயேசுவின் கடைசி நேரம் வந்தது

**வாழ்வு நெறி** : கிறிஸ்துவைப் பின்பற்றுவோர் எந்நேரத்திலும் தயாராக இருக்க வேண்டும், அவரையே எல்லா நேரத்திலும் தேட வேண்டும்.

**சுருக்கம்**

ஆலய இடிப்பு, வரும் அடையாளங்கள், அபிஷேகம், கடைசி இரவு, காட்டிக்கொடுத்தல், நகைச்சுவை, நீதிமன்றம், மறுதலிப்பு, இயேசுவின் பாடுகள், சிலுவை மரணம். ஆலயம் வருங்காரியங்களின் அடையாளம், அபிஷேகம், இராப்போஜனம் இந்த வசனங்கள் ஒலிவ மலை மேல் இயேசு பேசினதால் இது ஒலிவ மலை உரையாடல் என்று கூறுகிறார்கள். இயேசு எதிர்காலத்தின் இரண்டு காரியங்களை குறித்து பேசுகிறார். எருசலேமின் வீழ்ச்சி, ஆலயத்தின் அழிவு மற்றும் மரணத்தின் மேல் வெற்றி அடைந்து மகிமையோடு திரும்பி வருவதைக் குறித்து போதிக்கிறார்.

**'**விழித்திருங்கள்**'** என்ற வார்த்தையோடு அவர் ஆரம்பித்து முடிக்கிறார். அவர் சீஷர்களையும், நம்மையும் எச்சரிக்கிறார். சோதனைகள், சக்திகள் நம்மை வஞ்சித்து விசுவாசத்தை விட்டு வழிவிலகச் செய்யலாம். முடிவுரை விழித்திருந்து

தேவனுடைய வார்த்தையை பற்றி கொள்வோமா? யூதர்கள் இயேசுவை புறக்கணித்தால் அவர்களுடைய சிலாக்கியங்கள் பிடுங்கப்பட்டு புறஜாதிகளுக்கு அளிக்கப்பட்டன. எதிர்ப்புகள் தவிர்க்க முடியாதது. ஆனால் பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளை பெயர்படுத்தி இறுதி வரை பராமரிப்பார். கிறிஸ்து எப்பொழுது வருவார் என்று நான் அறிய வேண்டிய அவசியமில்லை. ஆனால் அவருக்காக ஊழியம் செய்யவேண்டும். தேவன் என்னிடம் ஒப்படைத்த பொறுப்புகளை நான் எப்படி செயல்படுத்துகிறேன்?

சில காரியங்களில் நான் தோல்வி அடைந்தாலும், தேவன் கட்டுப்பாட்டிலிருக்கிறாரென்று அறிந்து சமாதானமாயிருக்கிறேனா? பெத்ததானியாவில் இயேசுவை எண்ணெயால் அபிஷேகம் செய்த பெண்ணை பலர் கடிந்து கொண்டாலும் இயேசு அவளை புகழ்ந்தார். மரியாள் செய்தது அழகும், விலை உயர்ந்ததும் வாசனை நிறைந்ததும் ஒரு வருடத்தின் சம்பளத்தின் மதிப்புள்ளதுமாயிருந்தது. இயேசு எப்பொழுதும் உலகத்திலிராத படடியால் காலாகாலத்தில் இதை செய்தாள். அவள் சிறந்த முறையில் ஆராதிப்பதற்கு இதை செய்தாள் என்று இயேசு கூறினார். கிறிஸ்துவின் மேலுள்ள அன்பை வெளிப்படுத்துவதற்கு எந்த செயலும் மிகவும் பெரிதானதல்ல. இயேசுவின் மேலுள்ள அன்பை வெளிப்படுத்துவதற்கு எந்த செயலும் மிகவும் பெரிதல்ல. காட்டி கொடுப்பது, விவரித்தல், இயேசு கைது செய்யப்பட்டு, சோதிக்கப்பட்டு, சிலுவையில் அறையப்படுதல்.

600 ஆண்டுகளுக்கு முன்பு ஏசாயாவினால் இந்த அதிகாரத்திலுள்ள நிகழ்வுகள் விவரிக்கப்பட்டன. சீஷர்கள் பாஸ்காவை ஆசரிப்பதற்கு எருசலேமுக்கு சென்றார்கள். இங்கே இயேசு 'அப்பத்தை'' தனது சரீரம் என்று கூறி அதை பிட்டு தமது சரீரம் மீட்கப்படுவதை நிழலாக ஒப்பிட்டு கூறினார். அவர் பாத்திரத்தை எடுத்து 'இது எனது இரத்தத்தின் உடன்படிக்கை என்றார். இயேசு இங்கு தமது இரத்தத்தை சிந்துவதினால் தேவனுக்கும், மனிதனுக்குமிடையே ஒரு ஒப்பந்தம் நிலைத்திருப்பதை சுட்டிக்காட்டுகிறார். இயேசுவின் பரிபூரண தியாக பலியை அடிப்டையாக கொண்டு இரட்சிப்பு காணப்படுகிறது. இரட்சிப்பு மோசேயின் பிரமாணத்தினால் ஏற்படாமல் விசுவாசத்தினால் வரும் கிருபையினால் வருகிறது

எனவே. 2:8-9) இரவு போஜனத்தில் ஒருவன் தன்னை காட்டிக் கொடுப்பவன் என்று கூறி தங்கள் இருதயத்தை ஆராயுமாறு சொன்னார். இந்த நிகழ்வில் இன்றுள்ள திருவிருந்தில் ஆரானையை அவர் நிறுவினார்.

ஒலிவ மலைக்கு செல்லும் வழியில் பேதுரு தன்னை மறுதலிப்பான் என்று முன்னுரைத்தார். கெத்சமேனே தோட்டத்தில் அவர் பிரவேசித்து வேதனையோடு இந்த பாத்திரத்தை அகற்றுமாறு பிதாவிடம் ஜெபித்தார். ஜெபத்தில் மட்டுமே நெருக்கடியான நிலையில் எனது சித்தத்தை பிதாவுடைய சித்தத்துடன் இணைக்க முடியும். ஜெபத்தில் அவர்களோடு நிற்கும்படி கூறியது யார்? நான் ஜெபிக்கிறேனா? நெருக்கடியான நேரத்தில் எனது விருப்பமா அல்லது தேவனுடைய சித்தம் செய்யப்படுகிறதா? யூதாசுடன் வந்த மக்கள் இயேசுவை கைது செய்து பிரதான ஆசாரியனிடம் கொண்டு சென்றார்கள். யூதரின் பிரமாணத்தை மீறி. ஆதாரங்கள் இல்லாமல் பொய் சாட்சிகளால், மரணத்திற்கு தீர்ப்பளித்தனர். 'நீர் ஆசீர்வதிக்கப்பட்டவரின் மகனா? என்ற கேள்விக்கு  பதிலளிக்காமல் அமைதியாக இருந்தார். தானி:7:13:சாய:110:1 குறிப்பிடுகிறேன் என்று இயேசு கூறினார். பேதுரு இயேசுவை மறுதலிக்கும் வேதனையோடு மாற்கு 14ம் அதிகாரம் முடிவடைகிறது. பின்னர் இயேசு ரோம அதிகாரியான பிலாத்துவுக்கு முன் அழைத்துச் செல்லப்படுகிறார். மரண தண்டனையை நிறைவேற்ற யூதர்களை ரோமர்கள் அனுமதிக்கமாட்டார்கள். ஆனால் பிலாத்துவினால் முடியும். பிலாத்து தனது பதவியிலும், அதிகாரத்திலும் அதி ஆர்வமாயிருந்தான். இயேசுவை குற்றமற்றவர் என்று அறிந்தும் சிலுவையில்அறைவதற்கு ஒப்புக் கொடுத்தான். போர்வீரர்கள் கேலி செய்து அவர் முகத்தில் துப்புகிறார்கள். ஏசாயா 53:12 நிறைவேறுமளவில் இயேசு இரண்டு கள்வர்களின் மத்தியில் சிலுவையில் அறையப்பட்டார். அவர் நிமித்தம் வேதனையை அனுபவிப்பதற்கு அழைக்கப்பட்டதால் இந்த சம்பவம் நமது பைபிள் பிறப்பிடமாக இருக்கிறது. பல்வேறு அடையாளங்கள் நிகழ்ந்தன. நண்பகலுக்கு பிறகு இருள் வந்தது. இது தேவனற்ற வாழ்வை பிரதிபலிக்கிறது. பரிசுத்த ஸ்தலத்தை இரண்டாக பிரிக்கும் திரைச்சீலை மேலிருந்து கீழாக கிழிந்தது. இயேசுவின் மரணம் மனிதனுக்கும் தேவனுக்குமிடையே இருந்த தடையை அகற்றியது என்று பிரதிபலிக்கிறது. நூற்றுக்கு அதிபதி 'உண்மையில் இவர்

தேவனுடைய குமாரன் தான் என்று அறிக்கையிட்டான். (15:39) இயேசுவின் இரகசிய சீஷரான அரிமத்தேயு ஊரான யோசேப்பினால் அவருடைய சரீரம் நல்லடக்கம் செய்யப்பட்டது. இயேசுவின் சரீரம் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தென்று ஸ்தீரிகள் தான் புரிந்தது எவ்வளவு அதிசயம் அவர்கள் பயந்து நடுங்குகிறார்கள் என்று 18-ம் வசனம் கூறுகிறது. கிரேக்க மொழியில் அவர்கள் ஆச்சரியத்தோடு அதிசயத்தின் மகிழ்ச்சியில் தள்ளினார்கள் என்று கூறுகிறது. இயேசு தனிப்பட்ட முறையில் மரியாதைக்கு காட்சியளித்தார். லூக்கா 24:12-ல் பிரேத சீலைகள் அங்கே காணப்பட்டன என்று கூறுகிறது. ஜெபத்தில் மட்டுமே எனது நெருக்கடியான நிலையில் எனத சித்தத்தை பிதாவின் சித்தத்துடன் இணைக்க முடியும். சத்தியம் அறிவிக்கப்பட்ட பிறகு மௌனம் வார்த்தைகளைவிட வலுவாக பேசுகிறது. நாம் நம்மை அறிந்திருப்பதை விட இயேசு நம்மை அறிந்திருக்கிறார். பேதுருவைப் போல எப்பொழுது நான் எனது பாவத்தை உணர்ந்து அழுதிருக்கிறேன்?

***கிறிஸ்துவை பின்பற்றுவோர் எப்போதும் தயாராக இருக்க வேண்டும்.***

**பாடம் 13 : அத்தியாயம் 16**

**பாட வாக்கியம்** : இயேசு உயிர்த்தெழுந்தார். திருச்சபைக்கு பொறுப்பு தருகிறார். பிதாவிடம் சொல்கிறார்.

**நாள் 1**

வாசிக்க மாற்கு 16:1-8

1. யார் கல்லறைக்கு வந்தார்கள்? எப்போது? ஏன்?
2. பெண்கள் என்ன கண்டார்கள்?
3. வசனம் 5-8ல் பெண்களின் நிலை என்ன?
4. பெண்களுக்கு சொல்லப்பட்ட உத்தரவு என்ன? அதை அவர்கள் செய்தார்களா?
5. சீஷர்களின் எதிர்விசை என்ன? வசனம் 11 (பார்க்க யோவான் 12:16, 2:22)
6. இயேசுவை வெளிப்படுத்த பரிசுத்த ஆவியானவர் என்னென்ன செய்வார்? பார்க்க யோவான் 14:26

**நாள் 2**

வாசிக்க மாற்கு 16:9-20

1. யார் யாருக்கு இயேசு தரிசனம் தந்தார்? லூக்கா 24:9-45, யோவான் 20:19-29
2. இயேசுவின் தரிசனங்கள் ஏன் முக்கியம்? 1 கொரிந்தியர் 15:1-8

**நாள் 3**

வாசிக்க மத்தேயு 28:16-20, மாற்கு 16:15-16, லூக்கா 24:45-49

1. இயேசு தமது சீஷர்களுக்கு கொடுத்த உத்தரவுகள் என்ன?
2. இயேசுவின் சீஷர்கள் கீழ்ப்படிந்தார்களா? வசனம் 20
3. இயேசுவின் சீஷர்களாய் நீங்கள் இருப்பின் மேற்படி கட்டளைகளுக்கு கீழ்ப்படிவீர்களா?

**நாள் 4**

வாசிக்க யோவான் 6:40, 10:10, 11:25

1. இந்த வசனங்களிலிருந்து நமக்கு கிடைக்கும் வாக்குத்தத்தங்கள் என்ன?
2. இந்த வசனங்கள் உயிர்பெற வாழ்கிறீர்களா?

**நாள் 5**

மீன் பார்வை

1. மாற்கு சுவிசேஷம் எந்த அளவுக்கு பயனளித்துள்ளது?
2. வேறுபட்ட மனிதராய் இயேசுவின் சீடராய் இன்னும் சிறப்பாய் நீங்கள் வாழ என்ன செய்யப் போகிறீர்கள்?

**நாள் 6**

**பாடம் 13** : மரணம் தேவ குமாரனை அடக்கிக்கொள்ள இயலாது.

**பாடம் :** மாற்கு 16

**முக்கிய வசனம்** : 16:15 – நீங்கள் உலகம் எங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்.

**பாட வாக்கியம்** : இயேசு உயிர்த்தெழுந்தார், திருச்சபைக்கு பொறுப்பு தருகிறார். பிதாவிடம் செல்கிறார்.

**வாழ்வின் நெறி** : மரணம் தேவ குமாரனை அடக்கிகொள்ள இயலாது.

**சுருக்கம்** : இயேசுவின் தரிசனம், பரமேறுதல்

மாற்கின் கடைசி அத்தியாயம் மகிமையான ஒன்று அது. சொல்வதெல்லாம் இனி ஓய்வு நாள் என்று ஒன்று இல்லை என்பதே. ஓள்வுநாளின் இருள் உயிர்தெழுதல் வெளிச்சத்தில் அகன்றது. சுகந்த வர்க்கம் இட வந்த பெண்கள் கண்டதெல்லாம் காலியாகிப்போன கல்லறையே, திறந்த கல்லறையே, வசனம் 8 கூறுகிறது. நடுக்கமும் திகிலும் அவர்களை பிடித்துக்கொண்டது. கிரேக்க மொழிபெயர்ப்பு கூறுவது, அவர்கள் திகைப்பும், பயமும், மகிழ்ச்சியும், ஆச்சரியமும் நிறைந்தவராய் மாறிப்போனார்கள். வசனம் 9கூறுகிறது. மரியாவுக்கு இயேசு தரிசனமானார். லூக்கா 24:12ல் அவரைச் சுற்றிய துணிகள் மட்டும் அங்கே கிடந்தது என்று எழுதப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இயேசு பிறருக்கும் தரிசனமானார். எம்மாவூர் சீஷர்களுக்கு பின்னர் யாக்கோபுக்கு, யோவானுக்கு பிறகு 500 சீஷர்களுக்கு 1 கொரிந்தியர் 15:56. இயேசுவின் உயிர்தெழுதல் சிறப்பானது. இயேசுவின் மரணமும், உயிர்தெழுதலும் நற்செய்தியாகும். பவுல் கூறுவதுபோல இயேசுவினால் நாம் உயிர்தெழுந்த வாழ்வை பெறுகிறோம். (பிலிப்பியர் 3:8-14). இதன் பின்னர் இயேசு தமது பெரும் கட்டளையை தருகிறார். சுவிசேஷம் வார்த்தையினாலும் செயல்களினாலும் நிறைவேற வேண்டும். அவர் நம்மோடிருக்கும் கர்த்தர்.

***மரணம் தேவ குமாரனை அடக்கிக்கொள்ள இயலாது.***

***இப் பாடப்புத்தகம் மூலம் நீங்கள் தேவனுடைய வார்த்தையை ஆழமாக கற்று இருப்பீர்கள் என விசுவாசிக்கின்றோம். தொடர்ந்தும் அடுத்த பாடப்புத்தகத்தினை பெற்றுகொள்வதற்காக எம்முடன் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி***


**Nallaiya-Jeyaraj**

**Varnavalai alvai west alvai**

**Phone.+94-777393225**

**E-.mail:jeyarajac@gmail.com**